# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 317 புரட்டாதி 25ஆம் நாள் சனிக்கிழமை 12 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## எத்தியோப்பியாவின் அரச தலைவருக்கு அமைதிக்கான நோபல்

ஸ்டோக்ஹோம், ஒக். 12
எத்தியோப்பியாவின் அரச தலைவர் அபி அகமது அலிக்கு அமைதிக்கான நோபல் 25

அறுதிப் பெரும்பான்மையுடன்

# ராஜபக்ச அணி வசமானது எல்பிட்டிய பிரதேச சபை!

கொழும்பு, ஒக்ரோபர் 12
எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் 17 வட்டாரங்களிலும் வெற்றிபெற்று ஆட்சி அதிகாரத்தை மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கைப்பற்றியுள்ளது. 25





சகலருக்கும் சமவுரிமை - ஒரே நீதி

## சிறுபான்மை இனம் என்று விளிப்பதை ஏற்கவில்லை

தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் முன்னிலையில் சஜித்

கொழும்பு, ஒக். 12
'இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமையை ஏற்படுத்துவதே எனது இலக்கு' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் 25

## நாவற்குழியில் 63குடும்பங்களையும் வெளியேறுமாறு நீதிமன்று உத்தரவு!

சாவகச்சேரி, ஒக். 12
நாவற்குழியில் வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியேறிய குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுக் கட்ட 25

## கோத்தாவின் இரண்டாவது பரப்புரை இன்று

கொழும்பு, ஒக். 12
மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்த சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச நேற்று நாடு திரும்பினார். அவர் இன்று தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் 03

நெல்லியடிப் பொலிஸாரால்

## விசாரணைக்கு கொண்டுசெல்லப்பட்டவர் சடலமாக ஒப்படைக்கப்பட்டதால் குழப்பம்

யாழ்ப்பாணம், ஒக். 12
நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட குடும் 25

பலாலி

## வானூர்தி நிலையத்தை திறக்கப்போவது எவர்?

யாழ்ப்பாணம், ஒக். 12
பலாலி வானூர்தி நிலையத் திறப்பு விழாவில் சிறு குழப்பம் ஏற்பட்டுள்ளது. தேர்தல் காலம் என்பதால் அரசியல் கட்சிக 25

சென்னை - பலாலி இடையில்

## வாரத்துக்கு 7 வான்சேவைகள்

யாழ்ப்பாணம், ஒக். 12
சென்னையில் இருந்து பலாலி வானூர்தி நிலையத்துக்கு வாரத்துக்கு ஏழு வான் சேவைகளை நடத்துவதற்கு, எயார் இந்தியாவின் துணை நிறுவனமான, அலையன்ஸ் எயார் நிறுவனத்துக்கு இந்திய அரசு 03

நீராவியடி

## பிள்ளையார் கோவிலில் நேற்று சாந்திப் பூசைகள்

முல்லைத்தீவு, ஒக். 12
நீரவியடிப் பிள்ளையார் கோவிலில் நேற்று கொடும்பாவி எரிக்கப்பட்டு சிறப்பு சாந்திப் பூசைகளும் இடம்பெற்றன.
முல்லைத்தீவு - நாயாறு நீராவியடிப்பிள்ளையார் கோவில் வளாகத்தில் அத்துமீறித் தங்கியிருந்த பௌத்த பிக்கு கடந்த மாதம் உயிரிழந்தார். அந்தப் பிக்குவினுடைய உடலை நீதி 03

## நீராவியடி பிள்ளையார் கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்ட மக்களை ஒளிப்படம் எடுத்தவரால் பதற்றம்

முல்லைத்தீவு, ஒக். 12
முல்லைத்தீவு நாயாறு நீராவியடிப்பிள்ளையார் கோவிலில் நேற்று பெருமளவான இந்துக்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த நிலையில், அவர்களை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் ஒளிப்படம் எடுத்தமையை அடுத்து அந்தப் பகுதியில் நேற்றுப் பதற்றம் ஏற்பட்டது.
ஆலய நிர்வாகத்தினரும், வடமாகாண சபையின் முன்னாள் 03

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

## தெரிவுக் குழுவின் அறிக்கை 23ஆம் திகதி நாடாளுமன்றில்

கொழும்பு, ஒக். 12
கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர் இது குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான நாடாளுமன்ற சிறப்புத் தெரிவுக் 03

மன்னார் மாவட்டத்தில்

## 20 வீத முஸ்லிம்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் நீக்கம்

நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் எம்.பி. கோரிக்கை

மன்னார், ஒக். 12
மன்னார் மாவட்டத்தில் சுமார் 20 வீதமான முஸ்லிம் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி 25

விசுவமடு கூட்டுப் பாலியல் வன்புணர்வு

# யாழ். மேல் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பிட்ட சிப்பாய்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் விடுதலை

முல்லைத்தீவு, ஒக். 12
விசுவமடு கூட்டுப் பாலியல் வன்புணர்வு வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்டு, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் தலா 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மூன்று சிப்பாய்களையும் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து அவர்களை விடுதலை செய்துள்ளது.
2010ஆம் ஆண்டு விசுவமடுப் பகுதியில் பெண் ஒருவரை கூட்டாக பாலி 25

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டங்களை வளைக்கும் சர்வாதிகாரியா...

## ஜின்பிங்?

**பணிப்பெண் தேவை**

உரும்பிராயில் உள்ள சிறிய குடும்பத்துக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**தொடர்பு:-077 609 5604**

**கடை வாடகைக்கு**

உப்புமடச்சந்தி K.K.S வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள 4கடை இடைவெளி 1700 சதுர அடி கொண்ட கடை வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (CS 28635)(4.17)

தொடர்புகளுக்கு : 077 360 0703
+ 0447472350530

சீன அதிபர்களிலேயே, அதிகம் அறியப்பட்டவர், தற்போதைய அதிபர் ஸீ ஜின்பிங்தான். சீனாவின் மூன்று முக்கியப் பதவிகளும் ஜின்பிங்கிடமே உள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், நாட்டின் அதிபர், சீனா பீப்பீள்ஸ் ஆர்மியின் தலைவர் ஆகிய மூன்று பதவிகளில் அமர்ந்துள்ளார். சீனாவைப் பொறுத்தவரை, இவர்தான் சர்வ வல்லமை படைத்தவர். அரசியல் பின்புலம்கொண்ட குடும்பத்திலிருந்து வந்ததால், எங்கே... எப்படி காய் நகர்த்த வேண்டுமென்பது ஜின்பிங்குக்கு அத்துப்படி. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்த, மாசேதுங்குவின் நண்பர் ஸீ ஸாங்க் ஷ்வான் என்பவரின் மகன்தான் ஜின்பிங். தற்போது, 66 வயதான ஜின்பிங்தன்னை 'மக்கள்தலைவர்' என்று அழைத்துக்கொள்வார். உள்ளுக்குள் சாகும்வரை, சீன அதிபராக இருக்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்கிருப்பதாகத் தெரிகிறது.

### அசுர பொருளாதார வளர்ச்சி

சுமார், 40 ஆண்டுகளுக்கு முன் 88 சதவிகித சீனர்கள் நாளொன்றுக்கு 2.7 அமெரிக்க டாலர்களில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தனர். 1995 ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டுவரை சீனாவில் 6 கோடி பேர் வேலை இழந்தனர். இப்போது, சீனாவில் 6 சதவிகித மக்கள்தான் வறுமைக்கோட்டுக்குள் இருக்கின்றனர். ஜின்பிங்கின் ஆட்சிக்காலத்தில் சீனப் பொருளாதாரம் செழிப்படைந்துள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.



அலிபாபா உலகின் முன்னணி ரீடெய்ல் நிறுவனம். சீனாவின் தொழில்கள் மற்றும்வணிகவங்கி ஐ.சி.பி.சி உலகிலேயே மிகப் பெரிய வங்கிகளில் ஒன்று. டென்ஸன்ட் நிறுவனம், கணினி விளையாட்டு மென்பொருள்களைத் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளது. 'சைனா சதர்ன்' உலகின் மிகப் பெரிய வானூர்திச் சேவை நிறுவனம். உலகிலேயே 'சாம்சங்' [illegible] அதிக செல்போன்களை விற்கும் 'வாவே', 'உபெரின்' போட்டிநிறுவனமான 'டிடி' போன்ற நிறுவனங்கள் அசுர வளர்ச்சி கண்டது ஜின்பிங்கின் ஆட்சிக்காலத்திலேயே!

### ஊழலை ஒழித்தவர்



பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அதிபர் பதவியில் அமர்ந்ததும் ஊழலை ஒழிக்க ஜின்பிங், கடும் நடவடிக்கைஎடுத்தார். லஞ்ச ஊழலில் திளைத்த 15 லட்சம் அரசு அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர். விளைவாக, அரசுநிர்வாகம் சீரடைந்தது. இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகளால் சீன மக்களின் மனதில் ஜின்பிங் விரைவிலேயே இடம்பிடித்துவிட்டார். ஆனாலும், ஜின்பிங்கின் இந்த நடவடிக்கை அவருக்குச் சீனாவில் பல எதிரிகளைச் சம்பாதித்தும் கொடுத்துள்ளது. ராணுவ அதிகாரிகள், கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கைகள் பாய்ந்துள்ளன. எதிரிகள் அதிகமானதாலேயே, நிரந்தர அதிபரானால் மட்டுமே தன்னை அரசியல் எதிரிகளிடமிருந்து காத்துக்கொள்ள முடியுமென்பதையும் ஜின்பிங் உணர்ந்தார். அதற்காக, கச்சிதமாகக் காய் நகர்த்தினார், ஜின்பிங்.

1976ஆம் ஆண்டு, 'சீனாவின் தந்தை' என்று அழைக்கப்பட்ட மா சேதுங் இறந்தார். பிறகு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்ற டெங் ஜியோபிங்குக்கு உள்ளுக்குள் ஒரு பயம். வருங்காலத்தில் ஏதாவது ஒரு சீன அதிபர் தன்னை 'சர்வாதிகாரி' என்று அறிவித்துவிடக் கூடாதே என்பதுதான் அது. உடனடியாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவந்தார். சீனாவில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் அதிபர் பதவி வகிக்கக் கூடாது என்று புதிய சட்டம் வகுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தையே தனக்காக மாற்றவைத்துவிட்டார் ஜின்பிங். கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்குழு கூடி சீன அதிபர் பதவி விடயத்தில் முக்கிய முடிவெடுத்தது.

அந்த முடிவு, சீனாவின் நிரந்தர அதிபர் பதவியை ஜின்பிங்குக்கு வழங்கும் விதத்தில் அமைந்தது. "சீன அதிபர் பதவியில் இனிமேல் ஒருவர் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் தொடரலாம்" என்கிற புதிய விதி கொண்டுவரப்பட்டது. வாக்களிப்பில் பங்கேற்ற 3 ஆயிரம் பேரில் 2 பேர் மட்டுமே எதிர்த்து ஓட்டளித்தார்கள். 3 பேர் வாக்களிக்கவே வரவில்லை. 2 ஆயிரத்து 995 வாக்குகள் வித்தியாசத்தில் இந்தச் சட்டத்திருத்தம் வெற்றிபெற்றது. 2023ஆம் ஆண்டுவரை ஜின்பிங்குக்குப் பதவிக்காலம் உள்ளது. புதிய சட்டத்தால் ஜின்பிங் சீனாவின் நிரந்தர அதிபராகத் தொடரவும் வாய்ப்புள்ளது.

### ஜின்பிங் மனைவி

பார்க்க, சற்றே கரடுமுரடாக இருக்கும் சீன அதிபர் காதல் திருமணம் முடித்தவர்தான். முதல் திருமணம் விவகாரத்தில் முடிய, சீனாவின் பிரபல பாடகியான Penng Liyuvan ஐக் காதலித்து கரம் பற்றினார் ஜின்பிங். இந்தத் தம்பதிக்கு, ஒரு மகள் உண்டு. சீனாவில், 'ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை' என்ற சட்டம் நடைமுறையில் இருந்ததால், ஜின்பிங் மேற்கொண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளவில்லை. ஒரு குழந்தைச் சட்டத்தையும், 2015ஆம் ஆண்டு ஜின்பிங் நீக்கினார்.

**மரண அறிவித்தல்**



CS28431(16.17)

**அப்பையா சிவபாதசோம சுந்தரலிங்கம்**

(உரிமையாளர் இருபாலைச்சந்தி கடைத்தொகுதி)

இருபாலைச்சந்தி கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அப்பையா சிவபாத சோமசுந்தரலிங்கம் நேற்று (11.10.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**

மைத்துனர் சி. முருகேசு 077 903 9066,
சகோதரி மு. ஜெகதீஸ்வரி 021 223 1291
மருமகன் மு. மிரோஷன் 076 291 1261

இருபாலைச் சந்தி,
கோப்பாய் தெற்கு.

**22ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**கந்தையா குலசேகரம்பிள்ளை**

தோற்றம் 30.08.1926 — மறைவு 14.10.1997



இருபத்து இரண்டுவருடம் இதயங்கள் நெகிழ்ந்து
- இனிமைகாணுதையா!
பருவங்கள் மாறினும் பழையவை நினைக்க பாசங்கள்
- பெருகுதையா!
உருவங்கள் மனதில் உறைந்து கோயில் தெய்வமாய்
- உயருதையா!
பெருமைகள் சேர்த்து உரிமைகள் காத்து உள்ளகோயிலில்
- உயர் வோமையா!

குலம் சிறந்த குடும்பம் பாச குணம் நிறைந்த பழக்கம்
பலம் நிறைந்த பணிவு பழகும் திறனறிந்த பார்வை
நலம் சிறந்த வாழ்வு நாடுகடந்து நிற்கும் நற்புகழ்
வலம் காண இடம் அறியாவள்ளலை வாழ்த்துகிறாள்
- விழு பனையாள்

குடும்பத்தினர்.

எழுது மட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

(cs.28626) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடி வீட்டு ஏழை



இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவர்கள் நாட்டில் மிகக்குறைவு. ஒரு அரசன் இன்னொரு நாட்டின் மீது படை எடுத்துச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு காட்டைக் கடக்க வேண்டியிருந்தது. அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் தனது வெற்றிக்காக ஆசி பெறச்சென்றான். காட்டில் கடும் குளிர் அடித்தது. முனிவரோ, இடையில் மட்டுமே ஆடை உடுத்தியிருந்தார். தியானத்தில் ஆழ்ந்திருந்த அவருக்கு, தனது மேலாடையை எடுத்துப் போர்த்தினான் அரசன்.

கண்விழித்த முனிவர் அரசனைப் பார்த்தார். "யாரப்பா நீ! எதற்காக இங்கே நிற்கிறாய்"! "முனிவரே! நான் பண்ணைபுரத்தின் அரசன். பக்கத்து நாட்டின் மீது படையெடுத்துச் செல்கிறேன். நான் வெற்றி பெற. தங்களிடம் ஆசி பெறவே காத்திருக்கிறேன்". "சரி…எனக்கு அணிவித்த இந்த மேலாடையை எடுத்துச் செல்.".

"உங்களுக்கு குளிரும் என்று தானே அணிவித்தேன்!". "தேவையில்லை! நான் ஏற்கனவே பணக்காரன். இந்தச் சொத்தையும் சேர்த்து சுமக்க தயாராக இல்லை". "என்னிடம் இதுபோல் பல சால்வைகள் உள்ளன. அதில் ஒன்றைத் தான் கொடுத்தேன். இதை ஏற்பதில் என்ன தயக்கம்!"

"மகனே! உன்னிடம் ஏற்கனவே ஒரு நாடு இருக்கிறது.

அது போதாதென்று இன்னொரு நாட்டையும் பிடிக்கச் செல்கிறாய். அப்படியானால், உனக்கு தேவை இருக்கிறது. தேவை உடையவனே ஏழை. அவனுக்கே பொருள்கள் தேவை,".

அரசனுக்கு துறவியின் வார்த்தைகள் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. போர் எண்ணத்தைக் கைவிட்டு, நாடு திரும்பினான்.

## வழிகாட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்குப்பெண்பிள்ளைகளுக்கானவழிகாட்டலை மீள உருவாக்கும் வகையில் இன்று யாழ். முற்றவெளியில்நிகழ்வொன்றுஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

காலை 7 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனும், சிறப்பு விருந்தினராக இலங்கைப் பெண் வழிகாட்டிகள் சங்கத்தின் தலைமை ஆணையாளர் விசாகா திலகரட்ணவும், மதிப்புறுவிருந்தினராக இலங்கைப் பெண்வழிகாட்டிகள் சங்கத்தின் தலைவர் கலாநிதி சாந்திவில்சனும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

## தொடர்ச்சிகள்....

### சென்னை...

அனுமதி அளித்துள்ளது.

பலாலி வானூர்தி நிலையம் எதிர்வரும் 17ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. இந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. (ம)

### பிள்ளையார்...

மன்ற உத்தரவினை மீறி, ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் தகனம் செய்திருந்தனர்.

இதையடுத்து நேற்று சாந்திப் பூசைகள் இடம்பெற்றன. அத்துடன் அசுத்தப்படுத்தப்பட்ட கோவில் வளாகம் மற்றும் கோவில் தீர்த்தக்கேணி வளாகம் என்பவற்றைத் தூய்மைப்படுத்தும் நோக்கில், மஞ்சள் கலந்த நீர் தெளிக்கப்பட்டது. (ம-246)

### நீராவியடி...

உறுப்பினர் து.ரவிகரனும் இது குறித்து பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்த போதிலும் பொலிஸாரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. (ம-246)

### கோத்தாவின்...

கலந்துகொள்ளவுள்ளார் என்று பொதுமக்கள் முன்னணியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச, அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் தலைமையிலான இரண்டாவது பரப்புரைக் கூட்டம் இன்று 2 மணிக்கு யடியந்தொட நகரிலும், மாலை 3 மணிக்கு தெரணியாகல நகரிலும், மாலை 4 மணிக்கு ஹலியகொட நகரிலும் இடம்பெறவுள்ளன. (ம-22,31)

### தெரிவுக்...

குழு கடந்த மே மாதம் 22ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரியவினால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு முதல்தடவையாக மே மாதம் 29ஆம் திகதி கூடியிருந்ததுடன் இறுதியாக இந்த மாதம் 17ஆம் திகதி கூடவுள்ளது. இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 24ஆம் திகதி சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்த எதிர்பார்த்திருப்பதாகவும் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார். (ம-22)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.10.2019 | வெற்றி வாரம் 2644 | வர்ணம் கரு நீலம்
மேடம்
வெற்றி இலக்கங்கள் 02 18 33 45
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 036, 064/=
12.10.2019 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 758
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.10.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,412,565/-
வெற்றி இலக்கங்கள் 11 30 51 54 X
SEASON
விசேட வெற்றி இல. 5539
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 0114 824 824, 0112 333 778 or 1919
0114 825 825

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 1055
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.10.10 வியாழக்கிழமை
H 02 10 44 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,545,444/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 287
சீட்டிழுப்பு திகதி ▶ 11.10.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 10 19 42
விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 45, 283, 832/=
16.10.2019 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

MASSIVE VEHICLES AUCTION SALE



15th of October
LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM
VAVUNIYA
Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81
On View - 11th, 12th & 14th October
(Please refer the Udayan On 10th of October 2019 For the Full List Of Vehicles)
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.
Head Office & Showroom 21, Torrington Road, Kandy. Tel: 081 2227593, Fax: 081 2224371 Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom No.1A, Fairfield Gardens, Colombo 8. Tel: 011 2502680, 2585408. Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com

சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி - யாழ்ப்பாணம். வவுனியா




ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்
காலம் - ஒக்டோபர் 13th திகதி ஞாயிறு மாலை 3.30
இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்), செல்வா பெலஸ் (A/C)
காலம் - ஒக்டோபர் 14th திகதி திங்கள் மாலை 6.30
இடம் - வவுனியா நகர சபை கலாசார மண்டபம்
டிக்கட் 500/=,1000/= நிகழ்ச்சி அன்று மண்டபவாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்
வவுனியா - தொடர்புகளுக்கு - 077 311 1245 / 070 356 8333
077 4718 969 / 071 381 5114
K.T. பிரசாத்
(C 7794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வரப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை (ராசு)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை (ராசு) 09.10.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை வரப்பிரகாசம் மேரி ஜோசப்பின் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - பார்பரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகியின் (செல்வராணி) பாசமுள்ள அன்புக் கணவரும் ரெபினிக் (சூரியன்), அன்ரன் டோமினிக் (சந்திரன்), ஆஷாபரேக் (யூட்டீ), மேரி சுலேக்கா, மேரிநிர்மலா ஆகியோரின் அன்புத் தகப்பனும், காலஞ்சென்றவர்களான சின்னன், போல் மற்றும் அமிர்தம்மா, காலஞ்சென்ற மேரி றெஜினா ஆகியோரின் அன்புச் சகோதரனும், வவா, காஞ்சனா, உதயகுணசீலன், காலஞ்சென்ற டங்ஸ்ரன் மற்றும் ஜீவச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபினாஷ், மேரி டில்றுஷானா, சுஜீவன், பவித்திரா, சயந்தன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், சரஸ்வதி, சந்திரா, காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் மகேஸ்வரி, றஞ்சிதம், அருமைநாயகம், கிளி, காலஞ்சென்ற ஞானசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் வழிபாடு செய்யப்பட்டு, காக்கைதீவு புனித அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/28641)

தகவல்: **பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 08 . 1932



மறைவு 10 . 10 . 2019

## செல்லையா இராசசிங்கம்

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசசிங்கம் 10.10.2019 அன்று சிட்னி ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கதிரவேலு - தெய்வநாயகி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜீவகன்.ஜயந்தன், ஜனகன் ஆகியோரின் தந்தையும் பவானி, சாந்தினி, பிருந்தா ஆகியோரின் மாமனாரும் வினோ, ஆரணி, ஸ்ரீசக்தி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா வேலுப்பிள்ளை, சரஸ்வதி கனகரத்தினம், இராமநாதன், விஜயசிங்கம், கமலாம்பிகை நல்லையா மற்றும் புவனேஸ்வரி சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி தம்பையா, முருகேசு, தியாகராசா மற்றும் புவனேஸ்வரி அந்தோனிப்பிள்ளை, நடராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியா சிட்னியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**S.M.கேணியடி, காரைநகர்.**
**021 221 1792**

**தகவல் :புவனேஸ்வரி சிவசுப்பிரமணியம்,**

தொடர்பு மகன்கள் :
ஜீவகன் - + 61 417 249 659/ +61 2 9715 6003
ஜயந்தன் - + 61 402 907 064
ஜனகன் - + 61 470 250 556




# மரண அறிவித்தல்



## சுப்பையா இராசேந்திரம்

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசேந்திரம் நேற்று (11.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை திரவியம் தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக்கணவரும் கனடாவில் வசிக்கும் அஜந்தா, இராசேந்திரகுமார், பிரசாத், ரகுவதனி, கோமதி, சிந்துஜா, செல்வவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீமுரளிதரன், பிரபா, கவிதா, சசிக்குமார், சிவகுமார், ஜெனமே, ஜெனன் (கோபு), பார்த்திபன் ஆகியோரின் அன்பு மாமனும் அபிநயா, வருஜன், காயத்திரி, விதுஷா, கரிகாலன், துவாரகா, அனுசியா, இலக்கியா, கரனி, ஓவியா, இனியா, இனியவன், அபூர்வா, ஆதிரா, அட்சகன், தருண், லயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

CS24087(16/17)

# மரண அறிவித்தல்



## சிங்கராயர் தார்சீசியஸ்

**(ஓய்வுபெற்ற அதிபர் (யா/புனித மரியாள் வித்தியாலயம் OLR)**

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராயர் தார்சீசியஸ் நேற்று (11.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் சிங்கராயர், மரிய சலோமை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை, மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், லீலாவதியின் (லீலா) அன்புக் கணவரும், சொபியாவதனி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஆனந் (நோர்வே), நிஷாந்தினி, விமல் (vvmart and construction உரிமையாளர்), தயானந் (பிரான்ஸ்), அருட்தந்தை நிரூபன் (ஜேர்மனி, ஆன்மீக பணியக இயக்குனர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோர்ஜ் (சுவிஸ்), ஜேன் பாமினி (நோர்வே) ஜொணி எல்மோ (பிரான்ஸ்), ஜெயந்தினி, லக்ஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டொனால்ட் நீகன் - பிரஷாந்தி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), கனிஷியோ-றொஷேல் (மொறட்டுவ பல்கலைக்கழக நான்காம் வருட மாணவி), ஏஞ்சலா (பிரான்ஸ்), நிரஞ்சலா (பிரான்ஸ்), கிஷான் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்), கவின் (நோர்வே), சஞ்ஜெய் (பிரான்ஸ்), பிரவின் (நோர்வே), அஜய் (பிரான்ஸ்), மெல்வின் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், திரேசம்மா, லூத்தம்மா, காலஞ்சென்றவர்களான யூலியானா, கீதபொன்கலன், மேரி ஜோசப் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அல்வினஸ், கிறிஸ்ரி மற்றும் மரியநாயகம், மரிய டீனா காமலின், ஞானமலர், பத்மராணி, சண்முகராஜா, சிவானந்தராஜா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் (14.10.2019) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பி.ப 3.30 மணிக்கு தூய யாகப்பர் ஆலயத்தில் (குருநகர்) இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**171, [illegible] வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**அருட்தந்தை நிரூபன் தார்சீசியஸ்**

தொடர்புகளுக்கு: **விவியன் (விமல்) - 0775552142, நிரூபன்: 0776099091**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் முன்னேற்றத்திற்கு கல்வித்தகைமை ஓர் தடையாக உள்ளதா?



**MBA**
**BBA**
**B.Sc**

போட்டி மிகுந்த தொழிற்சந்தையை வெற்றி கொள்வதற்கு உங்கள் அனுபவத்தினையும் கல்வித் தகைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு நீங்கள் ஓர் பட்டதாரி ஆவதற்கான வாய்ப்பினை IIS வழங்குகின்றது.

ஆர்வமுள்ள மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வும் அனுமதிகள் தொடர்பான ஆலோசனைகளும் பல்கலைக்கழக பிரதிநிதிகளால் **19/10/2019** அன்று காலை **10:00** மணி முதல் மதியம் **2:00** மணி வரை இல **441** மணிக்கூட்டு கோபுர வீதியில்[பெருமாள் கோவிலுக்கு அருகில்] நடைபெறவுள்ளதால் தங்கள் பதிவுகளை **14/10/2019** திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு **071 777 4666** / **021 222 8060**

**IIS CITY CAMPUS**
**# 441, Clock Tower Road, Jaffna.**
TEL :- 021 222 8060
iis.edu.lk


# மரண அறிவித்தல்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 03 . 02 . 1933 | 08 . 10 . 2019 |

## வேலுப்பிள்ளை கந்தசாமி

***(ஓய்வு பெற்ற M.S.O தபால் ஊழியர்) K.K.S***

யாழ். மயிலிட்டி கொத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி கடந்த 08.10.2019 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள், வள்ளியம்மை, செல்லப்பாக்கியம் மற்றும் சம்மந்தபிள்ளை ஆகியோரின் சகோதரரும் சியாமிளிதேவி, சந்திரன், முரளிதரன் (ஜேர்மனி), பரணிதரன் (லண்டன்), வேலானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சௌந்தரராசா, நவஜோதி, ஜெயரஞ்சலி ஜஸ்மின், ஜந்தினி, ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, நாகேஸ்வரன் மற்றும் வாமதேவன், மதிவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராஜேஸ்வரியின் சகலனும் ஜெனேசன் சாரங்கா, பிரியங்கா, சந்துசன், சகிந்தன், கரணி, மிதிலா, மாதுஷா, மிலக்ஷன், பகலவன், லாகீஸ், வைஸ்ணவி, லதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை, நல்லடக்கம் என்பன 14.10.2019 திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிறுவிளான்,**
**இளவாலை.**

(CS 28350) (14.17)

**தகவல் :**
**மைத்துனர்.**

**+ 496 204 913588 - மகன்**
**+ 491 515 3361741 - மகன்**
**077 053 6402**


## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு பெண்கள் வேலையாள்கள் தேவை

**தொடர்பு:- 076 306 3306**



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 0214931111



## வேலை வாய்ப்பு

வீட்டு தாதி சேவையை (Home Nursing) வழங்கும் எமது நிறுவனத்திற்கு ஆள்கள் தேவை.

| | |
|---|---|
| அனுபவம் உள்ள | - 35,000/- |
| அனுபவமற்ற | - 30,000/- |
| வயது | - 18 -45 வரை |

**0773700182 / 0773533802**

**Prominment Home Nursing and Health care (Pvt) Ltd.**


# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி



மலர்வு 12.08.1955 — உதிர்வு 10.10.2019

பள்ளம்புலம் சரவணையைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி 10.10.2019 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பாலலோசனி தம்பதியாின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, கமலபூரணத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நல்லையா ஆனந்தசோதியின் அன்பு மனைவியும் பிரகீசன், வானுஜி, கஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகஜனின் அன்பு மாமியாரும் ஸ்ரீவர்மனின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் நாகேஸ்வரி, சிவசோதி, இராஜேஸ்வரி, ஞானபண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாமஈஸ்வரி, திருவருட்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

(CS/28639)

தகவல்:
**குடும்பத்தினர்,**
**(கணவர்) 0773362640**

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 08 . 1933 | 10 . 10 . 2019 |

## திருமதி குமாரசாமி சின்னம்மா

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சின்னம்மா கடந்த 10.10.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மூளாய் சின்னத்துரை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், திருமதி தணிகாசலம், கமலாதேவி (லண்டன்), தியாகலிங்கம் (லிங்கம்-பிரான்ஸ்), திருமதி கணேசன் விமலாதேவி (ஆசிரியர், யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், தணிகாசலம் (லண்டன், ஓய்வுநிலை எழுதுவினைஞர்), கணேசன் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி தி.திவிஜா (லண்டன்), ஆதிநீலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், திவாகரன் (லண்டன்), திருமதி.ஆ. சாலினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும், விதுஷ்கரன் (லண்டன்), ரஷ்னா (லண்டன்), நர்த்தனன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பூட்டியும், திருமதி மு.மீனாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி தி.தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் மற்றும் துரைராசா, செல்வராசா (ஓய்வுநிலை மின்கம்பியிடுபவர்) ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்கோவிலடி,**
**...டி வைரவர் வீதி,**
**சித்தன்கேணி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆலய வரலாறு

எங்கும் நிறைந்த இறைவனை சிறப்பாக ஓர் இடத்தில் இருத்தி சிந்தையைப் புனிதமாக்கி சீரோடு வாழ்வதற்கு எழுந்தவையே ஆலயங்கள்.

ஈழமணித் திருநாட்டின் சிரம் என விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே வடபால் அமைந்த பதி வடமராட்சி. இப்பதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பூத்த பழமையும் பெற்ற ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இந்த ஆலயமானது துன்னாலை, புலோலி வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள வல்லிபுரத்தில் அமைந்துள்ளது.

ஆர்ப்பரிக்கும் கடல், வெள்ளை மணற்பரப்பு, பசுமை கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் இடத்தில் மிளிர்வது சிறப்புக்குரியதாகும். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற ஒன்றாக மிளிர்வது சிறப்புக்குரிய அம்சமாகும்.

வல்லிபுரம் என்ற பெயருக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கி.பி.303 இல் நாகர்களுடைய ஆட்சியும் கி.பி.556 இல் லம்பகர்ணர் ஆட்சியும் நிறைவுக்கு வந்தாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப் பகுதிகளில் குடியேறிய படைவீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியபோது வடமறவர் ஆட்சி செய்த இடமாக வடமராட்சி விளங்கியது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கருத்துப்படி தொண்டை நாட்டில் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும், அவர்கள் குடியேறிய பிரதேசத்துக்கு வடமராட்சி எனப் பெயரிட்ட தாகவும், தெரிய வருகின்றது. இக்குழுவின் தலைவனாக வல்லிய தேவன் என்பவன் இருந்ததாகவும், எனவே அவன் பெயரைக் குறிக்கும் முகமாக இக் கிராமத்துக்கு வல்லி புரம் என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு கடவுள் பக்தியும், செல்வப் பெருக்கும் நிரம்பப் பெற்ற குடும்பத்தில் இலவல்லி பிறந்தாள் அவள் திருமணமாகி குழந்தைப் பேறின்றித் திருமாலை வழிபட்டுவந்தாள். இக் காலத்தில் விஷ்ணு வங்கக்கடலில் மீனவர்க்கு பெரும் தொல்லை கொடுத்து வந்தார் இவ்வேளை இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளத்தை அடைந்து கடலில் விளையாடினாள். பின்னர் படகில் ஏறி சிறித தூரம் சென்றாள். அவ்வேளை மீன் ஒன்று அவள் மடியில் பாய்ந்தது. அம்மீன் மடியில் அழகிய குழந்தையாகி சங்கு, சக்கரம் முதலிய வற்றைக் கொண்டதாகவும் காட்சி அளித்தது. இல வல்லியையும் தன் பூர்வீ பலனை எய்தியமை எண்ணி மகிழ்வடைந்தாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை அவளுக்கு அளித்துவிட்டு மறைந்தது.

இலவல்லி மச்சமாய், மகவுமாய் காட்சியளித்த மாயவனால் அருளப்பட்ட சக்கரத்தை வல்லிபுரத்துக்குக்கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தாள். இலவல்லி யின் ஆழ்ந்த பக்தியின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆலயம் அதலால் வல்லிபுர ஆழ்வார் என பெயர் பெற்ற சிறப்புப் பெற்றது எனலாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசை நடை பெறுகின்றது. சூரி வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரம் இடம்பெறு கின்றது. அதே நேர வைஷ்ணவர்களால் திருமாலின் சக்கரம் ஆயுதமாகப் பூசிக்கப்படுவதும் குறிப்பிடத்தக் சிறப்பம்சமாகும்.

ஆஞ்சநேயர் வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றதைக் காணமுடிகின்றது. சமுத்தி தீர்த்தத்தின் போது சக்கரத்துடன் ஆஞ்சநேயரும் எடுத்துச் செல்லப்படுவார். புராத மக்களுடைய நாகதம்பிரான் வழிபாட்டினையும் இங்கு காணலாம். இவ் ஆலயத்தி நாகதோஷம் நீங்க நாகதம்பிரானுக்கு பல நேர்த்திக் கடன்களை அடியவர்கள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நினைத்த காரியங்கள் நிறைவேறவும், திருமணப் பாக்கியம் குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பல நேர்த்திக் கடன்களை ஆற்றி வேண்டியவை வேண்டியவர்களுக்கு அருளும் காத்தற் கடவுள் விஷ்ணு பகவானும் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.

சிறிநதியா
வாடிக்கையாளர்களுக்கு விசேட செய்தி

NSR திருமண மண்டபம் மற்றும் நடராஜா பரமேஸ்வரி
ஆகிய திருமண மண்டபங்களில் நிகழ்வுகளை நடாத்த விசேட விலைக்கழிவுகள் வழங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.




இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 222 4452 | 021 221 1332
021 221 7786 | 021 222 2709

நடராஜா பரமேஸ்வரி
திருமண மண்டபம்





465/26, பருத்தித்துறை வீதி,
நல்லூர், (மனோன்மணி அம்மன் ஆலயம் அருகாமையில்)
தொ.பே - 021 222 1662 |
021 222 2709

எமது வாடிக்கையாளர்களே!
2020 ஆம் ஆண்டுக்கான முற்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளதால், உடன் உங்கள் முற்பதிவுகளை மேற்கொண்டு விசேட விலைக் கழிவுகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

முற்பதிவுகளுக்கு முந்துங்கள்
விவரங்களுக்கு:
077 6417 679

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து குமாரசாமி

**(ஓய்வுநிலை பிரதி அதிபர்- யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்)**

புத்தூர் வாதரவத்தையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து குமாரசாமி கடந்த 10.10.2019 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபத்திரையம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி, கந்தசாமி, இரத்தினசாமி, துரைச்சாமி, அருந்ததியம்மா மற்றும் சிவபாக்கியம், அண்ணாச்சாமி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் பாஸ்கரமூர்த்தி (நோர்வே), புண்ணியமூர்த்தி, சத்தியபாமா (ஆசிரியை - யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), கிருபாகரமூர்த்தி ( ஆசிரியர், யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), பிரபாகரமூர்த்தி (பிரதேச செயலாளர், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி), சத்தியறஜனி (ஆசிரியை - யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), கானமூர்த்தி ( பட்டயப் பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்வரி (நோர்வே), தவக்குமார், கௌரி, சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சந்திரகோபன் (எழுதுவினைஞர் , இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்), தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீனா (நோர்வே), திபேரன் ( நோர்வே), றதினிகா (நோர்வே), பபித்திரன், பதுமிதா, பதுமிதன், பாதுசன், பவகரன், பவநிதா, ஆர்த்திகன், ஆராதனா, மதுமிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2019 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01 மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**வாதரவத்தை, புத்தூர்.** (CS/28640)(11,17) **குடும்பத்தினர்.**

---

**யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் - வ/து)**

## LE- 5257 இலக்க பாரவூர்தி உடற்கோப்பு திருத்தியமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

இச் சங்கத்தின் **LE.5257** இலக்க அசோக் லேலண்ட் பாரவூர்தியினது உடற் கோப்பை திருத்தி அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உடற்கோப்பு தொடர்பாக வேலை விவரங்கள் விபரிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப் பத்திரங்களை சங்க காரியாலய வேலை நாள்களில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளவும்.


கேள்விப் பத்திரங்கள் 22.10.2019 ஆம் திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக **"தலைவர்" யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்** எனும் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவும்.

**செ. ஜெயக்குமார்,**
**தலைவர்,**
**யா/மா/பா/ உரிமையாளர் கூ.சங்கம்.**

(In.11446) (13,17)

---

# மரண அறிவித்தல்



பிறப்பு 05.02.2003 இறப்பு 02.10.2019

## சஜீவ் ரவிகுமார்

லண்டனைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சஜீவ் ரவிகுமார் 02-10-2019 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற அதிபர் - கனடா), பூபதி(ஓய்வுபெற்ற ஆசிரியை- கனடா) தம்பதிகள், காலஞ்சென்ற சண்முகராஜா, அன்னலட்சுமி தம்பதிகளின் அன்புப் பேரனும்,

ரவிகுமார் (புன்னாலைகட்டுவன்) நளாயினி (வேலணை) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முகேஸ்குமார், காயத்ரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேஸ்குமார்(ராகவன் - லண்டன்), ஜெயகுமார்(கனடா), அம்பிகைகுமார்(இந்தியா),நிமல குமார்(கனடா), சதீஸ்குமார்(லண்டன்), தயாநிதி(-பாரிஸ்) ஆகியோரின் அன்பு பெறாமகனும், பூமகள்(லண்டன்), இலகுநாதன்(இலங்கை), வாம தேவன்(ஓய்வுபெற்ற அதிபர்- இலங்கை), ஸ்ரீனிவாசன்(பாரிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர், சண், வாமதேவன்**
**(ஓய்வுநிலை அதிபர்)**

இல.109, பொற்பதி வீதி,
கொக்குவில். (IN/11439)

---

# மரண அறிவித்தல்

## திருமதி தில்லையம்பலம் நாகரெத்தினம் (நயினாதீவு)

**தோற்றம்** **02.08.1931**

**மறைவு** **10.10.2019**



நயினாதீவு 5 A வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.56/4, பழம்றோட், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் நாகரெத்தினம் 10.10.2019 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகசபை - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை- தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, முருகேசபிள்ளை, சுப்பிரமணியம், கதிரவேற்பிள்ளை, பரராசசிங்கம் மற்றும் சரஸ்வதி, சகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சௌந்தரம், சுந்தரேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, கனகாம்பிகை, நவசஞ்திதேவி, ஜெயராசா, சாரதாதேவி, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, திலகவதி, சபாரெட்ணம், மருதப்பு மற்றும் பரமேஸ்வரி, திருஞானம், திருச்செல்வம், ஜெகதாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், சத்தியராசன் (சுவிஸ்), இரத்தினராசன் (கொழும்பு), புஸ்பராணி, கோபாலராசன் (சுவிஸ்), சற்குணராசன் (சுவிஸ்), நீதிராசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகநிதி, அருணா, பேராசிரியர் வேதநாதன், ரஜனி, உதயகுமாரி, ராதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், சலோ - ஸ்ரெட்லர், சத்தியகீத், திவ்யா - ரவிமோகன், திவாகுலன், திசாரகன், ஸ்ரீவித்தியா - சங்கர், ஸ்ரீமனஸா - நிஷாந்தன், ஸ்ரீராமன், பிரவீன் - கஸ்தூரி, ரம்யா, சஞ்ஜித், சனோரா, சனாத், விபுல், விஜித், விப்ரகா, வியூகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எலய், எலன்னா, திரவியா, அபிநிதி, சேயவன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்து பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**56/4, பழம் றோட்,**
**கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.** (CS/28638)(11,17) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# குடும்ப நண்பரை இழந்துவிட்டேன்

## வடிவேலு வேதனை

தமிழ் சினிமாவில் 100க்கும் அதிமான படங்களில் நடித்தவர் நகைச்சுவை நடிகர் கிருஷ்ணமூர்த்தி. வடிவேலுடன் 'பின்லேடன் முகவரி கேட்கும் நகைச் சுவை' பிரபலம். மாரடைப்பு காரணமாக அண்மையில் உயிரிழந்தார்.

'குழந்தை இயேசு' படத்தில் நடிகராக அறிமுகமானவர். 'நாயகன்', 'நான் கடவுள்', 'தவசி', 'எல்லாம் அவன் செயல்' படங்களின் மூலம் அனைவராலும் கவனிக்கப்பட்டார். மறைந்த கிருஷ்ணமூர்த்தி, சினிமாவில் சண்டைப் பயிற்சியாளராக இருந்தவரின் மகள் மகேஸ்வரியைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவருக்கு பிரசாந்த், கவுதம் என்று இரண்டு மகன்கள் உள்ளனர். கிருஷ்ணமூர்த்தி பற்றி நடிகர் வடிவேலு கூறியிருப்பதாவது: மிகவும் நல்ல மனிதர். என் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார். அந்த அளவுக்கு குடும்ப நண்பர் அவர். இப்போது அவருடைய குடும்பத்துக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்றே தெரியவில்லை - என்றார்.







# மனதில் நினைப்பதை தட்டச்சு செய்யும் 'பேஸ்புக்'


நீங்கள் ஒரு வார்த்தை கூட சொல்லத் தேவையில்லை, எழுத வேண்டியதை, பரிமாற வேண்டிய கருத்துகளை மனதில் நினைத்தாலே போதும். உங்களின் மனது நினைப்பதைத் துல்லியமாகக் கண்டறிந்து அதை தட்டச்சு செய்யும் ஒரு கருவியைக் கண்டுபிடிப்பதுதான் பேஸ்புக்கின் அடுத்த திட்டம்.

இந்தக் கருவி மட்டும் வந்துவிட்டால் நீங்கள் மணிக்கணக்காக 'ஸ்டேட்டஸ்' போடவேண்டியதில்லை.

பேஸ்புக்கை 'லாக்இன்' செய்துவிட்டு இந்த உலகுக்கு நீங்கள் சொல்ல வேண்டியதை நினைத்தாலே போதும். அடுத்த நொடியில் அது பதிவாக உங்கள் முன் காட்சியளிக்கும். அதை ஒருமுறை படித்துவிட்டு 'போஸ்ட்' செய்ய வேண்டியதுதான் உங்கள் வேலை. அத்துடன், பேச முடியாதவர்களுக்கு இது பேருதவியாக இருக்கும்.

இந்தக் கருவியைக் கண்டுபிடிப்பதற்காகவே பேஸ்புக் சில கோடிகளை ஒதுக்கியுள்ளது. இப்போது சிலரிடம் பரிசோதனை முயற்சிகள் நடந்துவருகின்றன.

அடுத்த வருடத்துக்குள் மனதைப் படித்து தட்டச்சு செய்யும் கருவி சந்தைக்கு வந்து பலரை உறங்கவிடாமல் செய்யலாம். அத்துடன் மூளையிலிருந்து நேரடியாக வார்த்தைகளைக் கிரகித்து எழுதும் நவீன தொழில்நுட்பமும் எதிர்காலத்தில் வரப்போகிறது என்றால், மொழியின் எழுத்து வடிவம் என்னவாகும்?



## twitter

ச ப் பா ணி @manipmp

சின்ன வயசு போட்டோவில் அழகாக
இருந்தோம் என்கிறதை விட
அதிகமா முடி இருந்துச்சுனு நினைக்கும்போது
ஆயாசமா இருக்கும்.

அன்புடன் கதிர்™@kathir_twits

பிறர் தப்பித்து கொள்ள உங்களைக் காரணம்
சொல்லும் நிலைக்கு எந்த சூழ்நிலையிலும்
ஆளாகாதீர்கள்!

mohanram.ko@mohanramko

அடுத்தவங்களோட 'கையை, காலை பிடிச்சா
தான்' ஜெயிக்க முடியும், கபடி விளையாட்டில்!

ச ப் பா ணி @manipmp

நெடுங்காலம் புகைந்து கொண்டிருப்பதை விட
ஒரு கனமேனும் பற்றி எரிவதே மேல்!

ச ப் பா ணி @manipmp

மனிதன் கண்டுபிடித்த மிகப்பெரிய தந்திரம்
விட்டத்தை பார்த்து யோசிப்பதுதான்

முகமூடி™@mugamoodi11

கடவுளின் இருப்பிடம்
கல்லிலோ, மரக்கட்டையிலோ,
மண்ணிலோ இல்லை..!!

மனிதர்களின் உணர்ச்சிகளும்,
எண்ணங்களும் தான்..!!

சூழ்நிலைகள்
மாறும்போது
சிலரது
வார்த்தைகளும்
மாறும்
சிலரது வாழ்க்கையும்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரகவி காரை எம்.பி அருளானந்தம்



# தமிழர்களின் வரலாற்றில் சிறப்புப்பெறும் வல்லிபுர மாயவர்

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்றாகும். ஈழத் திருநாட்டை அலங்கரிக்கின்ற திருக்கோவில்களில் வடமராட்சியில் அமைந்த வல்லிபுரக் கோவில் உன்னதமான ஓர் இடத்தை வகிக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வகையில் பெருஞ்சிறப்பும் பெற்றது வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில்.

வல்லிபுரக் கோவில் அமைந்துள்ள மணற்பாங்கான பிரதேசமும், அதன் அருகிலுள்ள கடலும் ஆலயத்துக்கு அழகூட்டி நிற்கின்றன. பருத்தித்துறைப் பிரதேசத்தின் வல்லிபுரம் பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் பெருமானின் இந்தத் திருத்தலம் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள மிகப் பழமைவாய்ந்த வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

இந்தியாவிலுள்ள ஸ்ரீரங்கத்தை ஒத்தது வல்லிபுர மாயவர் ஆலயம் சக்கரத்தை மூலக்கருவறையில் வைத்துத் ஸ்தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம் என்னும் சிறப்பு இந்த ஆலயத்துக்கு உண்டு.

இதன் அமைப்பை நோக்குமிடத்து இந்தியாவில் உள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலய அமைப்பை ஒத்திருக்கின்றது. பெருமானின் தச அவதாரங்களுள் ஒன்றாகிய மச்ச அவதாரம் இங்கு நிகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது.

பாக்கு நீரினை ஓரத்தில் எழுந்த ஆலயம் அலைகள் ஆர்ப்பரிக்கும் பாக்கு நீரினை ஓரத்திலே நர்த்தனனாக எழுந்தருளி மாயவித்தைகளால் அடியார்களைக் கட்டி அவர்கள் முழுப் பேற்றினையும் அடைய வல்லிபுர மாயவனாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

இராஜகோபுரம் சப்த (ஏழு) தள இராஜ கோபுரம் ஓங்கி உயர்ந்து விண்ணை முட்டி ஆலய எழிலை உயர்த்தி நிற்கிறது. அதிலுள்ள சிலைகளும், சிற்பங்களும் தல வரலாற்றைச் சுட்டி நிற்கின்றன.



கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பதற்கமைவாக ஆலயத்துக்குச் செல்லும்போது முதலில் தெரிவது கோபுரமாகும். அது கீழே அகன்று மேலே ஒடுங்கிக் கலசங்களிலே நிறைவுறும். அதனை தூலலிங்கமென அழைக்கின்றோம். இந்த வகையில் வல்லிபுர ஆழ்வாரின் இராஜ கோபுரம் எழுபத்தொரு (71) அடி உயரமும் ஏழு(7) தளங்களையும் உடையதாகும். உலக அதிசயங்களும் ஏழு ஆகும். மகாவிஷ்னுவின் அவதாரச் சிறப்புக்களையும் வல்லிக்கு அருள்பாலிக்கும் திருக்கதைகளையும் கிருஷ்ணனின் லீலைகளையும், மகாவிஷ்ணு சக்கரமாகும் திருக்காட்சிகள் பலதையும் சித்தரிக்கும் வண்ணமாக அமைந்த இராஜகோபுரமாகக் காணப்படுகின்றது.

**சுதர்சனச் சக்கர வழிபாடு**

ஸ்ரீ மந்நாராயணனுக்கு அமைந்த ஆயுதங்கள் ஐந்தாகும். இந்தப் பஞ்சாயுதங்களே நாராயணனுக்கு திவ்ய ஆபரணங்களாகவும் விளங்குகின்றன. நாராயணனுக்கு வைகுந்தத்தில் இருந்து பணி செய்வதே பஞ்சாயுதங்களின் பெரும் பேறாகும். ஆயுதங்களாகவும், திருவடி நிலையாகவும் பட்டுப்பீதாம்பரமாகவும், படுக்கையாகவும், தலையணையாகவும், குடையாகவும், சிங்காதனமாகவும், பல நிலைகளிலும் உருவெடுத்து அடிமைப்பணி செய்வர். இப்படி சங்கரப் படையாக அடிமை செய்யும் நித்திய சூலிசுதர்சனம் எனப்படும் இவர் பஞ்சாயுதங்களின் முதன்மைபெற்றவர். என்றுமே இறைவனை விட்டுப் பிரியாத சுதர்சனமே விஷ்ணுவாகும். விஷ்ணுவே சுதர்சனமாகும் சுதர்சனச் சக்கரமானது.

இறைவனைப் போலே ஆதியந்தமெதுவும் இல்லாததாகும். எந்தவொரு ஆலயத்திலுமில்லாத சிறப்புச் சக்கர ஆயுதம் மூலமூர்த்தியாக எழுந்தருளி இருப்பது அந்த மூர்த்தியே. இன்று அழகரைச் சித்தி ரத் தேரிலே பவனி வருகின்ற திருக்காட்சியைக் கண்டு வல்லிபுர மாயவனின் வளமான திருவருளுக்கு எம்மையும் இணைத்துக் கொள்கிறோம்.

## வல்லிபுர மாயவன் தேரில் வரும் காட்சி

வல்லிபுர மாயவன் தேரில் வரும் காட்சி
சொல்லி முடியாதவன் அருளின் ஆட்சி
எல்லையில்லா மணல் வெளியின் ஆடி வரும்போது
தொல்லையெல்லாம் தீருமென பக்தர் மனம் பாடும்
வல்லைவெளி தாண்டி வந்து நிறைந்திருக்கும் வெள்ளம்
வல்லிபரமானவன் அழகில் மயங்கும் உள்ளம்
சக்கரத்து ஆழ்வாரை நம்பி வழிபட்டால்
சங்கடங்கள் தீரும் என நம்பி வடம் பிடித்தோம்
கோவிந்தா கோபாலா வான் பிளக்கும் கோசம்
கோலவண்ணக்கண்ணன் தரும் நேசம்

வல்லமையே உன்னை வணங்குகிறோம்
வயல் கடல் மணல் சூழ்வெளிதனிலே
வல்லிபுரமானவன் மாயவன் தேரேறி ஆடிவர அவன்
வடம்பிடித்து பக்தரெல்லாம் சூழ்ந்து வர
வந்து நம்பி வழிபடும் அடியவர் வாழ்வில்
இன்றும் வற்றாத அருள் தந்து காக்கும் மாயவனே
வல்லரகத்தனம் அழித்து ஒழிப்பவனே
வந்திடையா மீண்டும் எமக்காக அருள்தந்து
வல்லமையே உன்னை வணங்குகிறோம்...



புலோலியூர் வேல்நந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# குர்துகள் தாக்கப்படலாகாது

சிரியப் பகுதிகளில் வாழும் குர்துகளுக்கு எதிராக துருக்கி மேற்கொண்டுள்ள அத்துமீறல் தாக்குதல்களை அடுத்து குர்துகளின் பிரச்சினை இமாலயமாகியுள்ளது. அமெரிக்கா வழக்கம்போல குர்துகளுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இந்தியா, ஈரான், பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளும் துருக்கிக்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. இருந்தபோதிலும் எவ்வித அழுத்தத்தையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தாக்குவது என்பதில் துருக்கி விடாப்பிடியாக உள்ளது.

யார் இந்தக் குர்துக்கள்?. குர்துக்கள் எனப்படுவோர் ஓர் இனக் குழுமத்தினர். மத்திய கிழக்கு நாடுகளான துருக்கி, சிரியா, ஈராக், ஈரான் ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். குர்து மொழியைப் பேசுகின்றனர். தமது மொழியால் அவர்கள் தம்மை அடையாளம் காட்டுகின்றனர். இவர்களுக்கு என்றுதனியானநாடுஇல்லை.இதனால்குர்துக்களாகிய தாம் செறிந்து வாழும் பகுதிகளை குர்திஷ்தான் என்று அடையாளமிட்டுள்ளனர். குர்திஷ்தானைதனிநாடாக உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் எதிர்பார்ப்பு.

குர்திஷ்தான்என்றகனவைநிலைநிறுத்துவதற்காகவும், குர்துக்களைப்பாதுகாப்பதற்காகவும்வை.பி.ஸிஎன்ற கிளர்ச்சிக் குழுவொன்று அங்கு செயற்படுகின்றது. இந்தக் குழுவில்தான் குர்திஷ்தான் மெய்ப்படுவதும் கனவாகிப்போவதும்தங்கியுள்ளதுஎன்றுசொன்னால் அதில் மிகையில்லை.

குர்திஷ்தான் மலரக்கூடாது என்பதில் துருக்கி முழுமூச்சாக உள்ளது. குர்துகள் செறிவாக வாழும் பகுதிகளில் கச்சாவளம் அதிகம். எனவே குர்திஷ்தான் அங்கீகரிக்கப்பட்டால்தமது கச்சாவளம் பறிபோய்விடும் என்று துருக்கி கருதுகின்றது. குர்துக்கள் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் ஆதுரவைப் பெற்றவர்கள். எனவே அவர்களுக்கு என்று குர்திஷ்தான் என்ற தனிநாடு உதயமானால் மத்திய கிழக்கின் வல்லரசு என்ற தனது கனவு மெய்ப்படாது. அதை இஸ்ரேல் தட்டிப் பறித்துவிடும் என்பதும் துருக்கியின் எண்ணவோட்டம். இவை அனைத்தும் ஒன்று சேர்ந்துதான் துருக்கியின் தோட்டாக்கள் குர்துக்களை சிதைக்கின்றன.

இவை அனைத்தையும் சிறுபான்மையினரின் குரல் என்றுஐக்கியநாடுகள்சபையில்தன்னைத்தானே அறிமுகம் செய்த துருக்கியின் அதிபர் ரயிப் எர்டோகன் மேற்கொள்வது துயரத்திலும் பெரும் துயரம். ஆம், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத் தொடர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அண்மையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ரயிப் எர்டோகன், 'குரலற்றவரின்குரலாகநான்இங்கு இன்று உங்கள் முன்னால் நிற்கின்றேன். சிரியா, காஷ்மீர், ஏமன் பகுதிகளில் சிறுபான்மை மக்கள் தாக்கப்படுகின்றனர். அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர். அவர்களுக்கானநீதி எங்கே?. இந்த உயரிய சபை ஒடுக்கப்பட்டவர்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். உரியநடவடிக்கைகளைஇதயசுத்தியுடன் மேற்கொள்ளவேண்டும்' – என்று தெரிவித்திருந்தார்.

இதே ரயிப் எர்டோகன்தான் தற்போது சிறுபான்மை இனமான குர்து இனக் குழுமத்தின் மீது காட்டுத்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார். தனது நாட்டில் வாழும் சிறுபான்மையினருக்கு எதிராகஇராணுவநடவடிக்கைகளைமுன்னெடுத்துவிட்டு ஏனைய நாடுகளை நோக்கி விரல் நீட்டுவது என்ன வகையறா?

# தமிழர்களுக்கான தீர்வை தரப்போவது யார்?

இந்துமதி

தெற்கில் அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற ஆரம்பித்துவிட்டன. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முதலாவது கூட்டம் அநுராதபுரத்திலும், ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலிலும் இடம்பெற்றுள்ளன.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முதன்மை உரையாற்றிய கோத்தபாய முக்கிய அறிப்பொன்றை விடுத்தார்.

தாம் ஆட்சிக்கு வந்த மறுநாளே சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் அனைவரையும் விடுதலை செய்யப் போவதாக அவர் கூறியதே அந்த முக்கிய அறிவிப்பாகும்.

**கோத்தாவுக்கு எதிரானவர்கள்**

கோத்தபாய ஓர் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதும், மகிந்த ஆட்சியில் பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்து இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்தியதும் அனைவருக்கும் தெரிந்த விடயங்களாகும். இறுதிப் போரின்போது இராணுவத்தினரின் சகல நடவடிக்கைகளுக்கும் இவரே பொறுப்பாக இருந்துள்ளார். இறுதிப் போரின் போது படையினர் புரிந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை கோத்தபாய ஆரம்பம் முதலே கடுமையாக மறுத்து வருகிறார். தற்போது பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் அனைவரையும் விடுவிக்கப் போவதாகக் கூறுகின்றார். இதன் மூலமாக அவர் ஆட்சியில் அமர்ந்தால் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்குவாரென்பது உறுதியாகிவிட்டது. இதேவேளை, முன்னாள் இராணுவத்தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத்பொன்சேகா கோத்தாவின் வருகையை அறவே விரும்ப மாட்டார். அவர் மட்டுமல்ல அவருக்குச் சார்பாகச் செயற்பட்ட இராணுவத்தினரும் விரும்ப மாட்டார்கள். சரத் பொன்சேகாவுக்கு நடந்ததை அவர்கள் எளிதில் மறந்துவிடவும் மாட்டார்கள். முன்னாள் இராணுவத்தளபதியானமகேஸ் சேனநாயக்க கூறிய கருத்துக்கள் இதை உறுதி செய்கின்றன. ஆகவே கோத்தபாயவின் வருகைக்கு இராணுவத்தினர் மத்தியில் ஆதரவும் எதிர்ப்பும் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

**சஜித்தின் ஆதரவாளர்கள்**

இதேவேளை, சஜித் பிரேமதாசவை ஆதரித்து இடம்பெற்ற முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் கடல் அலையென நாடு முழுவதிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைவராகக் கொலைகாரன் ஒருவர் தேவையென்றால் கோத்தபாயவுக்கு வாக்களியுங்களென அங்கு திரண்டிருந்த மக்களைப் பார்த்துக் கூறினார். அங்கு உரையாற்றிய சஜித்பிரேமதாச குடும்ப ஆட்சிக்கு இனிமேல் இந்த நாட்டில் இடமில்லையெனவும், இராணுவ அடிமை ஆட்சிக்கு நாடு தள்ளப்படுவதை அனுமதிக்க முடியாதெனவும் கூறினார். ஏழை மக்களின் துயரைக் களைவதற்கான முயற்சிகளைத் தாம் முன்னெடுக்கப்போவதாகவும் அவர் உறுதிமொழி வழங்கினார்.

**தமிழர்களுக்குத் தீர்வு?**

ஆனால் கோத்தபாயவோ அல்லது சஜித்தோ நாட்டுக்குத் தொடர்ந்து சவாலாக இருந்து வரும் இனப்பிரச்சினை தொடர்பாகவோ அல்லது தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவது தொடர்பாகவோ எதுவுமே தெரிவிக்கவில்லை சிங்கள மக்கள் மத்தியில் இவை தொடர்பாக எடுத்துக் கூறி அவர்களுக்கு அறிவூட்டுவது அவசியமானதாகும். ஏனென்றால் சிங்கள மக்களின் ஒப்புதலின்றி தமிழர்களுக்கு எதையுமே வழங்க முடியாதென்பது இந்த நாட்டின் தலைவிதியாகவே மாறிவிட்டது.

இந்த நிலையில் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்கள் எதிர்கொள்கின்ற அவலங்கள் தொடர்பாகவும் சிங்கள மக்களும் புரியும் வகையில் அவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும். அந்த மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இது தொடர்பாக எந்தச் சிங்களத் தலைவர்களும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. பிரச்சினைகள் முற்றும்போது சிங்கள மக்களும், பௌத்த மகா சங்கத்தினரும் எதிர்ப்புக் காட்டுகின்றனர். நாம் என்ன செய்வது எனக் கையை விரிப்பதால் எதுவுமே ஆகப் போவதில்லை.

**ஆசை வார்த்தைகளைக் கூற வேண்டாம்**

தேசிய பாதுகாப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்துகின்ற சிங்கள அரசியல்வாதிகள், தமிழர்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் அக்கறை காட்ட வேண்டும். வெறுமனே தமிழர்கள் மத்தியில் நின்றுகொண்டு அதைச் செய்வோம், இதைச் செய்வோமென ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களை ஏமாற்றுவதை அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்ற முதன்மை வேட்பாளர்கள் முதலில் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இவ்வாறுதான் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இந்தத் தடவையாவது நேர்மையாகச் சிந்தித்துத் தமிழர்கள் ஆறுதல் அடையும் வகையில் உறுதிமொழிகளை வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தி.கௌதம்

# சுற்றுச்சூழலை மேம்படுத்தி சூழலைப் பாதுகாப்போம்

முற்காலத்தில் மனிதன் சூழலின் ஆதிக்கத்தில் இருந்தான். தற்போது சூழலின் ஆதிக்கம் வலுவில்லாமல் போய் மனிதனின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகின்றது. உலகின் அடையாளம் உயிர்களே. பல்லுயிர் பெருக்கமும் வாழ்வுமே பூமியின் ஆன்மா. ஒளி, காற்று, மண், நீர் இவற்றின் சமநிலையே உயிர்களின் தோற்றத்துக்கு காரணம். உயிர்களின் சமநிலை குலைந்தால் இயற்கையின் சமநிலை குலைந்து பூமியே அழிந்து போய்விடும். அதாவது இயற்கை மற்றும் உயிரினங்கள் அழிந்தும் மடிந்தும் போய் விடும். பின்பு பூமி சமநிலையான உயிர் தோற்றச் செயற்பாட்டில் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பரிணாம வளர்ச்சி முற்றிலும் முழுந்து புதிய பரிணாமம் தொடங்கும். எனவே சுற்றுச் சூழலைப் பாதுகாத்து உயிர்களின் சமநிலையைப் பேணி இயற்கையையும் உலகத்தையும் காக்க வேண்டும். இதனை உணர்ந்து இயற்கையோடு இயற்கையாக இணைந்தும் இயற்கையைப் போற்றியும் நம் முன்னோர்கள் வாழ்ந்தள்ளனர். அத்தகைய உணர்வும் வாழ்முறையும் இன்றைக்கு கேள்விக்குறியாக மாறியுள்ளது. இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?



**சூழல் என்றால் என்ன?**

நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் சூழல்தான். இதனை நாம் நிலம், நீர், வளி என மூன்றாக பிரித்து நோக்கலாம். இன்று நிலம், நீர்,வளி எல்லாமே பெரிதும் மாசடைகின்றன. நாம் முதல் நிலம் எவ்வாறு மாசடைகிறது எனப் பார்ப்போம். மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றுவதற்காக நிலத்தை ஆழத்தோண்டிய வண்ணம் இருக்கிறான். மாடி மனைகளைக் கட்டிக் கொண்டு வருகிறான். இதன்பொருட்டு மரங்களை வெட்டுகின்றான். சனத்தொகைக்கு ஏற்ப உணவுத் தானியங்களை பெருக்க செயற்கை உரங்களைப் பயன்படுத்துகின்றான். இதனால் மண்ணின் வளம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் பயிர் வகைகளுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்துவதால் பாதிப்பில்லை. ஆனால் செயற்கை உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணின் வளம் அற்றுப் போகும். அத்துடன் மட்டுமல்லாமல் மரங்களை வெட்டல் மற்றும் தொடர் மாடிக் கட்டடங்களைக் கட்டுதல் போன்றவற்றால் மண்சரிவு வெள்ளப்பெருக்கு போன்ற இடர்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மரங்களை அழிக்கக் கூடாது என்றால் மனிதனின் மரத் தேவைகள் எவ்வாறு பூர்த்தியடை யும்? என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் தோன்றலாம். மரங்கள் மண்ணைப் பாதுகாப்பன. மழையை வரவழைப்பன. கண்டபடி அவற்றை அழித்தால் மழை வளம் குன்றிவிடும். மரத்தைத் தறிப்பதனால் அதற்குப் பதிலாக மரக்கன்று ஒன்றை நாம் நாட்ட வேண்டும். காடு வளர்ப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

**நீர் மாசடைவது எப்படி?**

மனிதன் இறந்த விலங்கு தாவரப் பாகங்களை நீரில் இடல், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், அழுக்குகள் யாவும் கழிவுநீர் செல்லும் வாய்க்காலில் சென்று ஆறுகளுடன் கலக்கின்றன. ஆறுமற்றும் குளங்கள் ஏரிகளில் மக்கள் அழுக்குக் கழிவுப் பொருள்களை வீசுகின்றனர். பிளாஸ்ரிக் பொருள்களையும் பொலித்தீன் வகைகளையும் நிலத்தினுள் போட்டுப் புதைக்கின்றனர். இதனால் நிலமும் நீரும் மாசடைகின்றன. இவைகள் புதைக்கப்படுவதால் நிலத்தடி நீர் மாசடையும். அவை மண்ணிற் கிடந்து உக்கிப் போகாமல் கிருமிகளை உற்பத்தி செய்ய உதவுகின்றன. கழிவு நீர் செல்லும் வாய்க்கால் சுத்திகரிக்கப் படாமையால் நோய்களைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாக்கப்படுகின்றன. கிணறு, குளம், ஆறு அனைத்தும் மாசடைதலால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர் நோக்குகின்றனர். நாம் நிலத்தடி நீரைக் காக்க வேண்டும் நீரைக் காக்க மரங்களைக் காத்து நிலத்தடி நீரைக் காக்க வேண்டும். மக்கள் நீரின் அளவு 71 வீதம் என்றாலும் நுகரக் கூடிய நீரின் அளவு ஒரு வீதத்திலும் குறைவானது என்பதைப் புரிந்து நடக்க வேண்டும்.

**வளிமாசடைதல்**

இன்று போக்குவரத்துக்குப் பயன்படும் வாகனங்களின் தொகை பன்மடங்காக அதிகரித்துள்ளது. அவை வெளியேற்றும் புகை வீதிகளில் செல்வோரை மூச்சடக்க வைக்கிறது. இது மட்டுமன்றி தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை வான் மற்றும் வளி மண்டலத்தை புகை மயமாக்குகின்றது. இவை மட்டுமன்றி ஏவுகணைகள், விண்வெளிக் கணைகள் என்பனவும் வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. இதனால் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. சுத்தமான காற்றை மக்கள் சுவாசிக்க முடியாத நிலை ஏற்படுகின்றன. பல சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி இந்த மனிதச் செயற்பாடுகளால் பச்சை வீட்டு வாயுக்கள் வளி மண்டலத்தில் அதிகம் சேர்ந்துள்ளன. அத்துடன் மட்டுமன்றி ஓசோன் படையில் ஓட்டை விழுந்துள்ளது என்பதைக் கவலையுடன் கூற வேண்டும்.

**தடுப்பு நடவடிக்கை**

இவைகளைத் தடுக்க இலங்கை நல்லாட்சி அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உதாரணமாக டெங்கு ஒழிப்பைக் குறிப்பிடலாம். நூறு நாள் வேலைத்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அகில இலங்கை டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் நடைபெறுகின்றது. அத்துடன் டெங்கு நுளம்புகளை அழிக்க டொக்ஸொரின் கைட்ஸ் நுளம்புகள் சிங்கரா ஜவனத்திலிருந்து பெறப்பட்டு உள்ளன. தற்போது இலங்கையில் 80 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு உள்ளனர். அதுமட்டுமன்றி 230 பேர் டெங்கு காரணமாக உயிரிழந்துள்ளனர். தற்போது 'டொக்ஸொரின் சைட்ஸ்' நுளம்புகளைப் பற்றி மருத்துவ நிபுணர் சாகரிகா சமரசிங்க சர்வதேச கூறுகையில் இந்த நுளம்புகள் மனிதனின் குருதியைக் குடிக்காது பூவின் தேனை அருந்தும் இவை டெங்கு நுளம்புகளை உண்ணக் கூடிய முறை உள்ளது. தற்போது இந்த நுளம்புகள் பேராதனை தாவரவியல் பூங்கா, மீரிகம குண்டக சாலை ஆகிய பிரதேச சூழல்களில் உலாவவிட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். இதில் முழு வெற்றியைக் கண்டுள்ளார். பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையை மட்டுப்படுத்த செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் இவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மாணவர்களாகிய நாம் சுற்றுச்சூழலை மேம்படுத்தி சூழலைப் பாதுகாப்போமாக.

## ஆசிரியருக்கான கடிதம்

### மயிர்கொட்டிகளுக்கு சாவுத்தண்டனை வேண்டாமே!

பொதுவாகவே சமூக வலைத்தளங்களில் மீம்ஸ்கள் என்று சொல்லப்படும் துணுக்குகள் தாராளமாகக் கொட்டிக் கிடக்கும். நகைச்சுவை, கவலை, போராட்டம், கலாசாரம், கலைகள், அன்றாடச் செய்திகள் என்று பல தரப்பட்ட விடயங்களை வெளிப்படுத்துபனவாக இவை அமைகின்றன.

அந்த வகையில் கடந்த புதன்கிழமை எனது சமூக வலைத்தளத்தில் தென்பட்ட என்னைக் கவர்ந்த மீம்ஸ் ஒன்றை இங்கு வெளிப்படுத்தியுள்ளேன்.

ஒரு காலகட்டத்தில் ஆசையாகப் பிடித்து விளையாடிய வண்ணத்துப்பூச்சிகள் பற்றிய மீம்ஸ் இது. ஒரு காலத்தில் எங்கும் நிறைந்திருந்த வண்ணத்துப்பூச்சிகள் தற்போது அருதாகிவிட்டமையை இது உணர்த்துகின்றது. வலி தரக்கூடிய செய்தியொன்றை இந்த மீம்ஸ் எடுத்தியம்புகின்றது.

மயிர்கொட்டிகளே பின்னர் வண்ணத்துப்பூச்சியாக உருமாறுகின்றன. அத்தகைய மயிர்கொட்டிகளுக்கு மரண தண்டனைகளை நாம் கொடுத்துவிட்டு பின்னர் வண்ணத்துப்பூச்சிகளுக்காக வருத்தப்படுவதில் பயன் ஏது?

*ஆர்.லயனல், ஆனைக்கோட்டை.*




**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாமென்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதையும் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் தவறிழைத்தால் மாணவரும் அதையே செய்வர்

## யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி பிரேமசங்கர் தென்மராட்சி ஆசிரிய தின நிகழ்வில் உரை

கொடிகாமம், ஒக். 12

ஆசிரியர்கள் வழிகாட்டிகள். அவர்களைப் பார்த்து நடக்கும் நிலையிலேதான் நாங்கள் இருக்கிறோம். ஆசிரியர்கள் சரியாகச் செயற்படாத தன்மை அல்லது சரியாகச் செய்யத் தவறியமை காரணமாக மாணவர்கள் தவறான வழியிலே சென்று சமூகத்தில் தவறான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இது மிக வேதனைக்குரியது.



இவ்வாறு யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் தெரிவித்தார்.

தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர்தினநிகழ்வு ஏ9 வீதி கொடிகாமத்திலுள்ள நட்சத்திர மகாலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர்களின் சேவையென்று பணிநேர அளவீடுகள் 7.30 1.30 என்று சொல்லப்பட்டது. அப்படியல்ல, ஆசிரியர் தொழில் 24 மணிநேர சேவை. நான் நீதிபதி 24 மணிநேரமும் வேலை செய்தால் என்னுடைய வேலைகளைச் சரியாகச் செய்யமுடியும். இல்லையென்றால் சாத்தியமில்லை. சமூகத்தைவளர்த்தெடுக்கும் சிற்பிகள் ஆசிரியர்கள்.

ஆசிரியர் தினவிழாவில் நாங்கள் சில உறுதிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். 2020 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நாங்கள்நிறைவேற்றவேண்டியதுஎன்ன என்று தீர்மானிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தை இதய சுத்தியுடன் மேற்கொண்டு ஒழுங்காக மேற்கொள்ளநாம்ஆவனசெய்யவேண்டும். அது எனது வேண்டுகோள். நாம்செல்லும்பாதைகரடுமுரடானதாக இருக்கலாம். அவற்றையெல்லாம் சுட்டெரித்து எமது இலக்கை அடைய முயற்சிக்கவேண்டும். பல ஆசிரியர்கள் எந்த பயனுமில்லாது அப்பழுக்கற்றசேவையைஆற்றுகிறார்கள். அவ்வாறானஆசிரியர்கள் இருக்கும் இடத்தில் சில ஆசிரியர்கள் சில சங்கடங்களை ஏற்படுத்தி ஆசிரியர் குலத்துக்குக் களங்கம் ஏற்படுத்திஇருப்பதுகவலைக்குரிய விடயம். இன்றையகாலத்தில்யாழ்ப்பாணத்தில் அவ்வாறான நிலை இல்லைஎன்றுயாரும்கூறமுடியாது. அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரியர்கள்இல்லைஎன்றில்லை. புல்லுருவிகளாக ஒரு சிலர் செய்த செயலால் மொத்த ஆசிரியர் குழாமும் அவமானத்துக்கும் இகழ்ச்சிக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நமதுசில்லறைவிடயங்களைமறந்து எமது சமூகத்தின் சிற்பிகள் என்ற வகையில் எமது குழந்தை களைச் சரியாகவளர்த்தெடுக்கின்றபணியில் ஆசிரியர்கள் மிக அர்ப்பணிப்புடன் ஈடுபடவேண்டும்-என்றார். (த-159)

## கைதடியில் இன்று மாலை வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 12

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கம் வருடந்தோறும்நடத்தும்வாணி விழா இன்று மாலை 6.30 மணியளவில் கைதடிகிழக்குசனசமூக நிலையஅம்பலவாணர் கலையரங்கில்நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினராகநாவற்குழிமகாவித்தியாலயஅதிபர்சி.பவளகுமாரனும், மதிப்புறு விருந்தினராக கொழும்பு வெலிகம ஸ்ரோர்ஸ்உரிமையாளர் க.ச.பொன்னம்பலமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள், பட்டிமன்றம், சிறுப்பிட்டியூர் சத்தியதாஸ் வில்லிசைக்குழுவின் 'தீர்க்க சுமங்கலி' வில்லு ப்பாட்டும் இடம்பெறவுள்ளன என்று இந்து வாலிபர் சங்கத் தலைவரும் இந்து தர்மாசிரியருமான மு.பத்மரூபன் தெரிவித்தார். (த)

## இரு நூல்களின் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஒக்.12

பிரபல எழுத்தாளர்கள் இருவர் ஆங்கிலத்தில் எழுதிய இரண்டு நூல்களின் அறிமுக விழா யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சென் ஜோன் த பப்டிஸ்ற் தேவாலயத்தின் பரிஷ் மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட (இலங்கையின்ஈஸ்டர் நாள் துன்பியல்) மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் புவியியற் துறைப் பேராசிரியர் ஷாஹூல் ஹஸ்புல்லா மற்றும் சுவிஸ்லாந்தின்சூரிச்பல் கலைக்கழகத்தின் பேராசிரியர் ஊர்ஸ் கெய்ஸர் ஆகியோர் இணைந்து எழுதிய (கிழக்கு இலங்கையில் நிலத்துக்கான அணுகுதலைகையாளுதல்)ஆகியஇரண்டுநூல்களும்யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

ராஜன் ஹூலின் நூலை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறை விரிவுரை யாளர் கலாநிதிமகேந்திரன்திருவரங்கனும்,ஹஸ்புல்லா மற்றும் கெய்ஸரின் நூலையாழ்ப்பாணப்பல் கலைக்கழகத்தின் சமூகவியற் துறையின் மூத்த விரிவுரையாளர்கலாநிதி அகிலன் கதிர்காமரும் அறிமுகம் செய்து வைத்து உரையாற்றுவர்.

அறிமுக உரைகளை அடுத்து பங்குபற்றுபவர்களுடானஉரையாடலும் இடம்பெறும்என்றுநிகழ்வின் ஏற்பாட்டாளர்களான சக வாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியத்தினர்தெரிவித்துள்ளனர். (க-105)

# இலங்கை மீனவர்கள் 18இல் விடுதலையாவர்

## கொன்சியூலர் கூறினாரென்று சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் எழுவைதீவு கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்தி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக கொன்சியூலர் உறுதியளித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அவர்அனுப்பியசெய்திக்குறிப்பில்இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 18 மீனவர்கள் கடந்த 3 ஆம் திகதி அதிகாலை எழுவைதீவில் இந்தியக்கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டு நாகபட்டினம் பொலிஸார் ஊடாக புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய இயந்திரங்கள், படகுகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களும் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தையடுத்து கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமீனவர்களின்குடும்பங்களையும், எழுவைதீவுகடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கத்தினரையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கடந்த 6ஆம் திகதி நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.



இது குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக கொன்சியூலர் சங்கர் பாலச்சந்திரனுக்கு நிலமையை விளக்கிக் கடிதமும் அனுப்பியிருந்தார். மீனவர்களின் குடும்ப நிலை மற்றும் வாழ்வாதார நிலமை, வங்கிக்கடன் போன்ற இடர்பாடுகளை க் குறிப்பிட்டு மனிதாபிமான அடிப்படையில் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்.

அதன்போதே எதிர்வரும் 18ஆம் திகதி தமிழகநீதிமன்றில்முன்னிலைப்படுத்தி அன்றைய தினமே அவர்களை விடுதலைசெய்து வானூர்தி மூலமாக இலங்கைக்கு அனுப்பப்படுவர் என்றும் கடற்படையினர் கைப்பற்றிய படகுகள் உள்ளிட்ட உபகரணங்களை மீனவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். (த-105,6)



மக்களின் அடிப்படை வாழ்க்கைப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில், ஜேர்மன் நாட்டின் இலங்கைக்கான துணைத் தூதுவர் அன்றியாஸ் பேர்க் மற்றும் மன்னார் நகர சபைத் தவிசாளர்ஞா.அன்ரனிடேவிட்சன்ஆகியோருக்கு இடையில் தவிசாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது. (த-56)

## குருதிக் கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக் 12

வடக்கு மாகாண வீதிபாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் குருதி கொடை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

'குருதியை தானம் செய்யுங்கள் வீதியில் அல்ல' என்னும் தொனிப்பொருளில்மருத்துவமனையில் அமைந்துள்ள மறுவாழ்வு நிலையக் கட்டடத்தின் முதலாம் மாடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



கடந்த 7 ஆம்திகதி ஆரம்பமான வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரமானது நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (ஐ-7)

## கூட்டம்

சாவகச்சேரி, ஒக்.12

யாழ்ப்பாணமாவட்டகற்றாளை உற்பத்தியாளர் சங்க மாவட்ட நிலைக் கூட்டம் இன்று சனிக்கிழமை திருநெல்வேலி விவசாயப் பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களையும், கற்றாளைஉற்பத்தியில் ஆர்வமுள்ளவர்களையும் வருகை தருமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரியல் விஞ்ஞான சகல அலகுகளும் அடுத்தவருட ஏ.எல். பரீட்சைக்கு வரும்

## இந்தமுறை மட்டுமே விலக்களிப்பு என்று அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

க.பொ.உயர் தர வகுப்பின் 2020 ஆண்டு பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு, உயிரியல் விஞ்ஞான பாடப் பரீட்சையின் அனைத்து அலகுகளும் மதிப்பிடப்பட்டு வினாத்தாள்கள் தயாரிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

க.பொ.உயர் தர 2019ஆம் ஆண்டுக்கான உயிரியல் விஞ்ஞான பாடப் பரீட்சையில் அலகு 10 இல் வினாக்கள் உள்ளடக்கப்படமாட்டாது என்று கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றைக் கல்வி சார்ந்த உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியிருந்தது.

அது 2019ஆம் ஆண்டின் புதிய பாடத்தின் கீழ் நடத்தப்படும் உயிரியல்விஞ்ஞான வினாத்தாளிலேயே அலகு 10 இல் வினாக்கள் உள்ளடக்கப்பட மாட்டாது. அடுத்த வருடம் உள்ளடக்கப்படும். கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைத் திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அந்த அலகை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக உயிரியல் விஞ்ஞானப் பாடத்தின் அலகு 10 இல் வினாக்கள் இந்தமுறை உள்ளடக்கப்பட மாட்டாது. 2019ஆம் ஆண்டுக்கு மட்டுமே இது உள்ளடக்கப்பட மாட்டாது. அதற்குப் பின்னரான காலப் பகுதியில் அலகு பத்தில் இருந்தும் வினாக்கள் உள்ளடக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது.

ஆகவே க.பொ.த.உயர் தரத்தின் 2020 ஆண்டு நடைபெறும் உயிரியல்விஞ்ஞானப்பாடப்பரீட்சையில் அனைத்து அலகுகளும் மதிப்பிடப்பட்டு வினாத்தாள்கள் அமையும். இதற்கு அமைவாக 2020 ஆம் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அந்த அலகைக் கற்பிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (த-7)

## ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

சாவகச்சேரி, ஒக்.12

பற்றைப் பகுதியில் தூக்கில்தொங்கிய நிலையில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொடிகாமம் கெற்பேலி சிவன் கோவிலுக்கு அருகில் உள்ள பற்றையில் இருந்தே நேற்றுமுன்தினம் இவர் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்தபகுதியில் காணப்பட்ட சடலம் தொடர்பில் கிராம அலுவலர் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட பதில் நீதிவான் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சவச்சாலையில் ஒப்படைத்து விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய சுந்தரம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஜ-9)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம் சாவகச்சேரி தான்தோன்றீஸ்வரர் வாரியப்பர் கோவில் பெருந்திருவிழா கடந்த எட்டாம்திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும்16 ஆம்திகதி முற்பகல்10.30மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமைமுற்பகல்11மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

கோவிலில் கேதாரகௌரி விரதப் பூசைகள் கடந்த எட்டாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து 27 ஆம் திகதிவரை தினமும் பிற்பகல் 2.30 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி நடைபெறும்என்றுதெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

# கால்நடை மருத்துவ அதிகாரி தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

வவுனியா, ஒக்.12

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச கால்நடை மருத்து அதிகாரி தாக்கப்பட்டமைக்கு இலங்கை அரச கால்நடை மருத்துவர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாந்தைக் கிழக்குப் பிரதேச கால்நடை மருத்துவ அதிகாரி, கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அம்மையில் பாண்டியன் குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, நபரொருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், இதுவரை எவ்விதமான ஆக்கபூர்மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தச் சம்பவத்தால் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் அவ்விடத்தில் சேவையை மேற்கொள்ள கால்நடை மருத்துவர்கள் தயங்குகின்றனர். இந்தச் சம்பவத்தைக் வன்மையாக கண்டிப்பதோடு, உரிய அதிகாரிகள் இதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

மருத்துவர்கள் சேவையாற்றுவதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் அலுவலகம் உட்பட்ட வடமாகாண கால்நடை மருத்துவ அலுவலகங்களின் வாகனப் பற்றாக்குறை தொடர்பாக வடமாகாண ஆளுநர் மற்றும் முதன்மைச் செயலர் ஆகியோருக்கு எமது சங்கம் தெரியப்படுத்தியருந்த போதும், அதற்கும் இதுவரை தகுந்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை- என்றுள்ளது. (க-110)



# நலன்புரிச் சங்கத்தின் ஓராண்டுநிறைவுநிகழ்வு

வடமராட்சிகிழக்குமக்கள் நலன்புரிச் சங்கத்தின் ஓராண்டுநிறைவுநிகழ்வு பொற்பதி நலன்புரிச் சங்க காரியாலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சங்கத் தலைவர் அ. அசோக்குமார்தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்குகளை ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் சி. வேந்தன், நாகர்கோவில் வட்டார பிரதேசசபைஉறுப்பினர் ஆ.சுரேஸ் குமார், வடமராட்சிஇளைஞர்நாடாளுமன்ற உறுப்பினர் உ.நிதர்சன், யாழ்ப்பாணம் பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் வினோதன், வடமராட்சிக் கிழக்குப்பிரதேசசெயலக சமூகசேவைஅலுவலகர் தி. கணேஸ்ராஜ் உட்பட பலரும்ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து பொற்பதி நலன்புரிச் சங்கத்தின் ஓராண்டுநிறைவைமுன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

மேலும்மாணவன்ஒருவருக்கு ஈருருளி ஒன்று வழங்கப்பட்டது.

தொடர்ந்து இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்ற தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவன்ஜெ.ஜொய்சன் மற்றும் 156புள்ளிகளை பெற்ற பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவி ரா.தாரணி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

தொடர்ந்து கருத்துரைகளை பொற்பதிறோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் வினோதன், குடத்தனை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலைஅதிபர்மு.கதிர்காமலிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர்சி.வேந்தன்,பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்ஆ.சுரேஸ்குமார் மற்றும் வடமராட்சிக் கிழக்குப்பிரதேசசெயலக சமூகசேவைஅலுவலகர் தி. கணேஸ்ராஜ், வடமராட்சி கிழக்குப் பிரதேச இளைஞர்நாடாளுமன்ற உறுப்பினர் உ. நிதர்சன் உட்படபலர் வழங்கினர்.

நிகழ்வில்கலந்துகொண்ட முதியோர்களுக்கு அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஜ-160)

## சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

தலைமன்னார், ஒக. 12

மன்னாரின் சன்னார் பகுதியில் வன இலாகாவுக்குச் சொந்தமான பகுதியில் மரம் அரிந்து கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என்றும் அவர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் வன இலாகாத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை மரம் அரிந்து கொண்டிருந்தபொழுது சந்தேக நபர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

95 ஆயிரத்து 965 ரூபா 14 சதம் பெறுமதியான 45 மரப் பலகைகளை அவர் அரிந்துவிட்டார் என்றும் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (த-60)



# சிறுவர்களுக்கான நிறந்தீட்டும் போட்டி

வவுனியா, ஒக்.12

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான நிறந்தீட்டும் போட்டி வவுனியா பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது.

தேசிய வாசிப்பு மாதம் இம்முறை "வாசிக்கும் சமூகத்தை சிறுவர்களிடமிருந்து உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதனை முன்னிட்டு வவுனியா நகரசபை பொது நூலகத்தால் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நேரம் எனும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி நேற்று நடத்தப்பட்டது.

வவுனியா பொது நூலகத்தின் முதன்மை நூலகர் திருமதி பாமினி உருச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற போட்டியில் 4 வயது தொடக்கம் 8 வயதுக்குட்பட்ட முன்பள்ளிச்சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் வாரங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் நகரசபை நிர்வாக அலுவலர் தர்சனா சுகுமார், மற்றும் பொது நூலக ஊழியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர்கலந்துகொண்டனர். (ஜ-110, ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போன மூதாட்டி குளக்கரையில் சடலமாக மீட்பு

வவுனியா.ஒக்.12

வவுனியா பேயாடி கூழாங்குளம் கொக்கு வெலியப் பகுதியில் காணாமல் போயிருந்த மூதாட்டி, மூன்று நாள்களின் பின்னர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

பேயாடிபுளியங்குளக் கரையிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று மாமடுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொக்குவெலியைச் சேர்ந்த 85 வயதுடைய செல்வராஜா விஜய லட்சுமி என்பவர், குளிக்கச் செல்வதாக தெரிவித்து விட்டு கடந்த 8 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பேயாடிகுழாங்குளம், குளப்பகுதிக்கு மாடு மேய்ப்பதற்குச் சென்றவர் அந்தப் பகுதியில் சடலமாகக் கிடந்ததை அவதானித்துள்ளார்.

தகவல் பொலிஸாருக்குத் தெரியபடுத்தபட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த மாமடுப் பொலிஸார் விசாரணைக்களை முன்னெடுத்தனர்.

அதேவேளை வவுனியாவில் காணமல் போயிருந்த குடும்பத் தலைவர் ஒருவர் கள்ளகுளம் பகுதியில் நேற்று முந்தினம் சடலமாக மீட்கபட்டிருந்தார். (க-ரி4,110)

## வாணி விழா

கொடிகாமம்,ஒக் 12

யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க பாடசாலையின் வாணி விழா கடந்த செவ்வாய்க்கிழமை வித்தியாலய மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி க. ஈஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட கோலம் போடுதல், மாலை கட்டுதல், பண்ணிசை ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-159)

# பூர்வீக நிலங்களைத் துப்புரவுசெய்ய மகாவலி அதிகார சபை தடுக்கிறது

## விவசாயக் குழுத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

கொக்குளாய், கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைச் சுத்தம் செய்தபோது மகாவலி அதிகார சபையினர் தடுக்கின்றனர் என்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், விவசாயக் குழுத் தலைவருமான கிருஸ்ணபிள்ளை சிவகுரு தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாயில் எமது பூர்வீக நிலங்களிலிருந்து நாங்கள் இடம்பெயர்ந்து பல வருடங்களாகி விட்டன. பராமரிப்பின்றி பெரும் பற்றைகள் சூழ்ந்துள்ளன. அந்தப் பகுதிகளை முழுமையாகத் துப்புரவு செய்வதன் மூலமே மீண்டும் எமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல முடியும் என்பதை நாம் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் கவனத்துக்குக்கொண்டுசென்றோம். 46 விவசாயிகளுக்குச் சொந்தமான 120 ஏக்கர் வயல் நிலம் என்பதை மாவட்டச் செயலகமே முன்னர் உறுதி செய்திருந்தது. இதற்கான காணி அனுமதிப் பத்திரங்களும் எம்மிடம் உள்ளன. போர் காரணமாக 1984இல் இடம்பெயர்ந்த நிலையிலேயே இந்தப்பகுதி பற்றைகளாக மாறின. இந்தக் காணிகளுக்கு மிக அருகில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை சிங்கள மக்களைக் குடியமர்த்தி விட்டது.

நாம் தற்போது குடியிருக்கும் சிங்கள மக்களின் இடத்துக்கு அண்மையாகவேனும் செல்லவில்லை. எமக்கு உரித்தான நிலத்தை பண்படுத்தவே முற்பட்டோம். அதனைக் கூட நாம் மேற்கொள்ளவில்லை. அரச திணைக்களமான கமநல சேவைத் திணைக்களம் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா மூலமாக ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா செலவில் துப்புரவு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் எமக்கு உரித்தான நிலத்துக்கு மேலாக அரச நிலத்தையும் துப்புரவு செய்துள்ளோம். அந்த அரச நிலம் தமது ஆளுகைக்கு உரியது என்று கூறும் மகாவலி அதிகார சபையினர், மாவட்டச் செயலகம் ஊடாக அந்த நிலங்களுக்குச் செல்லக் கூடாது என்று தடை விதித்துள்ளனர். எனவே இதற்கு மாவட்டச் செயலகமே தகுந்த தீர்வைப் பெற்றுத் தரவேண்டும். என்றார்.

குமரங்கண்டல் மற்றும் மன்னாவெளியைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்ததாவது:

இந்தப் பகுதியில் 800 ஏக்கர் நிலம் எங்களுடையதே. 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் ஏற்பட்ட காலத்தில் சிங்களவர்கள் எம்மை அடித்து விரட்டினர். இதனால் படிப்படியாக இங்கிருந்து இடம்பெயர ஆரம்பித்தோம். 1984ஆம் ஆண்டுடன் நாம் இங்கிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டோம். மகாவலி அதிகார சபை உட்புகுந்து. தமது ஆளுகை என்று அரசிதழ் பிரசுரித்துள்ளது. 800 ஏக்கரில் 216 ஏக்கர் நிலத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றியுள்ளது. இதனைப் பலமுறை கூறியும் எதனையும் செய்ய முடியவில்லை. 800 ஏக்கரில் 216 ஏக்கர் நிலம் போக எஞ்சிய 584 ஏக்கரையேனும் எம்மிடம் ஒப்படையுங்கள் என்று மகாவலி அதிகார சபையிடம் பலமுறை கோரிக்கை விடுத்தோம். தலா 2 ஏக்கர் நிலம் வீதம் அனுமதிப்பத்திரம் வழங்க மகாவலி அதிகார சபையினரும் ஒப்புக்கொண்டனர். இருப்பினும் அவை கைக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையிலேயே 584 ஏக்கர் நிலத்தில் முதற்கட்டமாக வயல் செய்ய முன்வந்த 46 விவசாயிகளின் 120 ஏக்கர் நிலம் துப்புரவு செய்த நிலையில் அதனை மகாவலி அதிகார சபை தலையிட்டு தடை விதிக்கின்றது. இது குறித்து அண்மையில் ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு சென்றோம். இந்த நிலத்தின் உரிமையாளர்கள் மகாவலி அதிகார சபையின் கீழ் இருக்கவிரும்புகின்றனரா பிரதேச செயலரின் கீழ் இருக்க விரும்புகின்றனரா? என்பதைப் பதிவு செய்யுமாறு கோரியிருந்தார். அதற்கு தாம் தொடர்ந்தும் பிரதேச செயலரின் ஆளுகையின் கீழேயே எங்கள் நிலத்தைப் பேண விரும்புகின்றோம் என்று எழுத்தில் தெரிவித்துள்ளோம். என்கின்றனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் கேட்டபோது,

அந்தப் பகுதி தமிழ் மக்களின் வாழ்வாதார நிலம். தற்போது அந்தப் பகுதிகள் அனைத்தும் மகாவலி அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தமது அனுமதியின்றி எந்த அபிவிருத்தியும் செய்ய முடியாது என்று அதிகார சபை தெரிவித்துள்ளது. இதனால் தேர்தல் காலத்தில் எந்த முரண்பாடும் ஏற்படக்கூடாது என்பதற்காக துப்புரவு செய்த 120 ஏக்கர் நிலம் தவிர்ந்த எஞ்சிய பணியை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது - என்றார். (து-105)

### 24 பேருக்கு டெங்குத் தாக்கம்

## வர்த்தக நிலையங்களில் டெங்கு பரிசோதனைகள்

வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் அண்மைக் காலமாக டெங்கு நுளம்புத் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் 24 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதனையடுத்து வியாபார, வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா மில் வீதி, பசார் வீதி, தர்மலிங்கம் வீதி போன்ற வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

வியாபார நிலையங்களின் மேல் தளங்களில் காணப்படும் மொட்டைமாடிகள், தண்ணீர்த் தாங்கிகள், கூரைகள், வெற்றுப் போத்தல்களில் மழை நீர் தேங்கிக் காணப்பட்டுள்ள இடங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து விழிப்புணர்வு துண்டறிக்கைகள் குறித்த வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகள் சீரமைப்பதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தவறுபவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (த)

## 'செஞ்சோலையின் வலிகள்' பாடல் வெளியீட்டு நிகழ்வு

வவுனியா.ஒக்.12

செஞ்சோலை உறவுகளின் துயரங்களை சுமந்து வரும் "செஞ்சோலையின் வலிகள்" என்னும் பாடல் வெளியீட்டு நிகழ்வு நாளை கிளிநொச்சி செஞ்சோலை மாதிரிகிராமத்தில்காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. வவுனியூர் ரஜீவனின் கவி வரியில் உருவான இவ் காணொலிக்கான பாடல்களை மறைந்த முன்னனிப் பாடகர் எஸ.ஜீ.சாந்தனின் மகன் சகிலன் பாடியுள்ளார். இப்பாடலுக்கான இசையை இசை கனல் பி.எஸ்.விமல் வழங்கியுள்ளார் (ஐ)

## துப்புரவுப்பணிகள் முன்னெடுப்பு



முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய், மல்லாவி மற்றும் மாங்குளம் பிரதேசங்களில் துப்புரவுப்பணிகள் நேற்றுமுந்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. இலங்கைப் பாதுகாப்புப்படையினிரின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை 65 ஆவது பாதுகாப்புப் படையினரால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-74)

## மாணவர்களுக்கு செயலமர்வு

கிளிநொச்சி,ஒக்.12

2019ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர சாதாரண பரிட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடி வழிகாட்டல் செயலமர்வு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

கல்விக் கூட்டுறவுச் சங்க மாவட்ட முகாமையாளர் நிகல் ராஜபக்சவின் ஒழுங்கமைப்பில், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வட மாகாணப் பிரதிநிதியும், கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் வடமாகாண பணிப்பாளருமான வோல்வினின் இந்த வருடச் செயற்திட்டத்தின் கீழ் செயலமர்வு நடத்தப்பட்டது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி, கல்விக் கூட்டுறவு சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் பிரதிநிதி மற்றும் பாட ரீதியில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் செயலமர்வில் பங்கேற்றனர்.

செயலமர்வில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் பங்குகொண்டு பயனடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



## ஈருருளி கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும்மாணவி அ.அபிசாலினிக்கு கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக ஈருருளி ஒன்றுவழங்கப்பட்டது. பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வும், நிறுவுநர் தின நிகழ்வும் நேற்றுமுன்தினம் பாடசாலையில்சிறப்பாகநடைபெற்றன. இதன்போதே இந்த உதவி வழங்கப்பட்டது.

கே.கே.எஸ் வீதியில் உள்ளசக்திவேல்இரும்பக உரிமையாளர் ச. சந்துருவால் இந்த உதவி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகள்

## ஆசிரியர் தின நிகழ்வுகள்





யாழ்ப்பாணம்,ஒக்.12
யாழ்ப்பாணம் வை.எம்.சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர் மற்றும் ஆசிரியர் தின நிகழ்வுகள் நிறுவன மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.
நாவாந்துறை கலைவாணி முன்பள்ளி, அரியாலை சென்.யூதா முன்பள்ளி, பூம்புகார் சண்முகா முன்பள்ளி, அரியாலை அறிவொளி முன்பள்ளி,வை.எம்.சி கிராமம், இயக்கச்சி ஆகிய முன்பள்ளிகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வை.எம்.சி நிறுவனத் தலைவர் ப.தேவமித்திரன்,யாழ்ப்பாணக் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. கி.ஜெகதாரணி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

✦ ✦ ✦ ✦

கொடிகாமம்,ஒக்.12
தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.
தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.
தென்மராட்சி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 43 பேர் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.
அத்துடன் குழு நடனம், குழு இசை,'ஆரொடு நோகேன்' என்ற நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-159)



யாழ்ப்பாணம்,ஒக்.12
ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலை மற்றும் முன்பள்ளிகளின் அதிபர்,ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.
இந்த மதிப்பளிப்பு நிகழ்வு நெடுந்தீவு தேவா கலாசார மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவு கோட்டக்கல்வித் திணைக்களத்தின் அனுசரனையுடன் நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தீவக கல்விப்பணிப்பாளர் பொன்னையா இரவிந்திரன், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி மற்றும் நெடுந்தீவு கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஹென்றி அன்ரன் மரியதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
நெடுந்தீவு மகாவித்தியாலய முன்றலில் இருந்து சகல அதிபர், ஆசிரியர்களும் விருந்தினர்களும் தேவா கலாசார மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
அங்கு மதிப்பளிப்பு நிகழ்வு இடம் பெற்றதுடன் முன்பள்ளி மற்றும் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. பாடசாலைகளின் அதிபர்கள் 8 பேர் , ஆசிரியர்கள் 103 பேர், முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட 128 பேர் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-104)

✦ ✦ ✦ ✦



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி, வயாவிளான் மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. கண்காட்சியை ஆசிரியர்களும், மாணவர்களும் பார்வையிட்டதுடன், நூல்களையும் கொள்வனவு செய்தனர். (க)



✦ ✦ ✦ ✦

## அடிக்கல் நடும் நிகழ்வு



யாழ்ப்பாணம்,ஒக்.12
யாழ்ப்பாணம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரம் மீள் குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு இளைஞர் விவகாரம் வடக்கு மாகாணஅபிவிருத்தி அமைச்சின் 12 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.
பாடசாலையின்அதிபர் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் குறித்த அமைச்சின் செயலர் வீ.சிவஞானசோதி கலந்துகொண்டு அடிக்கல்லை நடுகை செய்தார்.
மேலும் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-ரி1)

✦ ✦ ✦ ✦





வடக்கு மாகாண வீதிப்பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு வயாவிளான் மத்திய கல்லூரியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. பலாலி, காங்கேசந்துறை போக்குவரத்துப் பொலிஸார் போக்குவரத்து விதிகள் தொடர்பான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்கினர். (க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்ல விடயங்களைக் கொண்டுவந்தால் ஏற்று ஆதரவுதரும் பண்பு வடக்கிலுள்ளது

## வீதி விபத்து விழிப்புணர்வுப் பேரணியில் ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்கு மாகாணத்துக்கு நல்ல விடயங்களைக் கொண்டுவரும்போது அதனை ஏற்று அணிதிரண்டு ஆதரவு தரும் நல்ல பண்பு இந்த மக்களிடையே காணப்படுகிறது என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வீதிப்பாதுகாப்பு வாரத்தையொட்டி ஆளுநர் செயலகத்திலிருந்து யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம் வரையில் நேற்று நடைபவனி நடைபெற்றது. ஆளுநர் தலைமையில் நடந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்துக்கு நல்ல விடயங்களைக் கொண்டுவரும்போது அதனை ஏற்று அணி திரண்டு ஆதரவு தரும் நல்ல பண்பு இந்த மக்களிடையே காணப்படுகிறது. அதற்குச் சாட்சியாக இந்த நடைபவனியில் பலர் அணிதிரண்டுள்ளனர். வேறு எந்த மாகாணத்திலும் நடைபெறாத ஒரு வேலைத் திட்டத்தை நாம் முன்னெடுத்து அதில் வெற்றி கண்டுள்ளோம். வீதிப் பாதுகாப்பு மட்டுமன்றி சமூக நாகரிக பாதுகாப்பு வாரமாகவும் இது விளங்குகின்றது. நான் பல நாடுகளுக்குச் சென்றுள்ளேன். அவர்கள் வீதி விதிகளைச் சரியாகப் பின்பற்றுகிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் தான் முச்சந்தி, நாற் சந்திகளில் நிற்காமல் செல்கிறார்கள். மூன்று லட்சம் கட்டாக்காலி மாடுகள், நாய்கள் வீதியில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே பல்வேறு காரணங்களால் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. வீதிப் பாதுகாப்புத் தொடர்பாக கொழும்பு அமைச்சருக்கும் சொல்லியுள்ளேன். வீதிப் பாதுகாப்பு வாரத்துக்கு பல்வேறு ஒத்துழைப்பை வழங்கிய மருத்துவர் கோபிசங்கர் உட்பட அனைவருக்கும் நன்றிகள்- என்றார்.

வீதிப் பாதுகாப்பு வாரத்தில் வடக்கு முழுவதும் பல்வேறு மட்டங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி நாடகங்கள், பாடசாலை ரீதியான பேச்சுப் போட்டிகள், பாடசாலைகளில் மாணவ போக்குவரத்துப் பிரிவை அமைத்தல், குறுந்திரைப்படம் மற்றும் துணுக்குகள் உருவாக்கம், சிறந்த வாகன ஓட்டுநர்களைத் தெரிவு செய்தல், அவர்களை மதிப்பளித்தல், விபத்துக்கள் குறைந்த பொலிஸ் நிலையங்களைத் தெரிவு செய்தல், அரச அலுவலர்களுக்கான இலவச உடற்தகுதி மருத்துவ பரிசோதனை மற்றும் வடக்கு மாகாணத்தில் விபத்துக்கள் அதிகமான இடங்களை இனங்கண்டு அந்த இடங்களில் போக்குவரத்துப் பொலிஸாரின் மாதிரிகளைக் காட்சிப்படுத்துவது உள்ளிட்ட பல விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நடைபவனியில் பொது மக்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். (த-7)

## விபத்து விழிப்புணர்வுப் பேரணி மன்னாரிலும் நேற்று நடைபெற்றது

மன்னார், ஒக். 12

வீதிப்பாதுகாப்பு வார விழிப்புணர்வான நடைபவனி மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 9 மணியளவில் நடைபெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் எஸ்.ஜெசிந்தன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனி மன்னார் பஸார் பகுதியூடாகச் சென்று மீண்டும் மன்னார் மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது. மன்னார் மாவட்டச் செயலக அதிகாரிகள் பணியாளர்கள் உட்பட திணைக்களப் பணியாளர்களும் குறித்த விழிப்புணர்வு நடைபவனியில் கலந்து கொண்டனர். நடைபவனியைத் தொடர்ந்து மாவட்டச் செயலகத்தில் வீதிப்பாதுகாப்பு உறுதி மொழியையும் அதிகாரிகள் எடுத்தனர். (த-56)






## ஒலுமடுவில் மாணவர்களுக்கு வீதி விபத்து விழிப்புணர்வுகள்

வவுனியா, ஒக். 12

வவுனியா, நெடுங்கேணி ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாணவர்களை வீதி விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு மாணவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வு வீதி நாடகம் பாடசாலை மாணவர்களால் முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் நேற்று பாடசாலைக்கு முன்பாக மாணவர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் வீதிநாடகம் மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்டு விழிப்புணர்வு நாடகம் காண்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களால் வீதி விபத்துக்களிலிருந்து நடைமுறை [illegible] சத்தியப்பிரமாணமும் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. (த)






## வீதிப் பாதுகாப்பு வாரத்தில் வவுனியாவில் விழிப்புணர்வு

வவுனியா, ஒக்.12

வீதிப் பாதுகாப்பு வாரம் விழிப்புணர்வு நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

மாவட்டச்செயலர் எம்.கனீபா தலைமையில் முற்பகல் 9 மணியளவில் வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனி கண்டி வீதி வழியாக வவுனியா நகர சபை வரை நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், வீதிப் பாதுகாப்பு சபை மற்றும் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியன இணைந்து நடத்தும் இந்த வீதிப் பாதுகாப்பு வாரம் வடக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் மாவட்டச் செயலர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வீதிப் பாதுகாப்பு வார விழிப்புணர்வு நடைபெறுகின்றது.

வடக்கு முழுவதும் பல்வேறு மட்டங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி நாடகங்கள், பாடசாலை ரீதியான பேச்சுப் போட்டிகள், பாடசாலைகளில் மாணவ போக்குவரத்துப் பிரிவை அமைத்தல், குறுந்திரைப்படம் மற்றும் துணுக்குகள் உருவாக்கம், சிறந்த வாகன ஓட்டுநர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு மதிப்பளித்தல், விபத்துக்கள் குறைந்த பொலிஸ் நிலையங்களைத் தெரிவு செய்தல், அரச அலுவலர்களுக்கான இலவச உடற்தகுதி மருத்துவப் பரிசோதனை மற்றும் வடக்கு மாகாணத்தில் விபத்துக்கள் அதிகமான இடங்களை இனங்கண்டு அந்த இடங்களில் போக்குவரத்துப் பொலிஸாரின் உருவ மாதிரிகளைக் காட்சிப்படுத்துவது உள்ளிட்ட பல விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பமான வீதிப் பாதுகாப்பு வார விழிப்புணர்வு எதிர்வரும் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (த-110,ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு பண்பாட்டு விழா வவுனியாவில் ஆரம்பம்

## இன்றும் நடைபெறும்



வவுனியா, ஒக். 12

கலாசார பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்பட்டு வடக்கு மாகாணப் பண்பாட்டு விழா இந்த வருடம் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், பண்பாட்டுப் பெருவிழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகங்களில் வருடாந்தம் கலை பண்பாட்டுப் பெருவிழா நடைபெற்று வருகின்றது. இம்முறை பண்பாட்டு பெருவிழா வவுனியாவில் இரண்டு நாள்கள் கொண்ட நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசியர் நா.சண்முகலிங்கத்தின் தலைமையில் பொன் பூலோகசிங்கம் அரங்கில் முதல் நாள் காலை நிகழ்வுகள் நடைபெற்றன.

'பண்பாட்டு மேம்பாட்டுக்கான கலைகள் இருப்பும் எதிர்பார்ப்பும்' எனும் தலைப்பில் ஆய்வரங்கம் இடம்பெற்றது. அதில் வெவ்வேறு தலைப்புகளில் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன.

முதல்நாள் மாலை நிகழ்வுகள் வேலுப்பிள்ளை சிவசேகரம் அரங்கில் நடைபெற்றன. அரங்கில் பரத நாட்டியம், புத்தாக்க நடனம், றபான் நடனம், இளம் கலைஞர் விருது வழங்கல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆரம்ப நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் எம் கனீபா, பிரதேச செயலர் க. உதயராசா, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சுஜீபா சிவதாஸ் மற்றும் கலை சார்ந்த துறை வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் விபுலரத்தின இபுல்கஸ்வெவ அரங்கு, ஆனந்தராஜா அரங்கு என காலை, மாலை இன்று இடம்பெறும். பட்டிமன்றம், கவியரங்கம், பண்பாட்டு ஊர்வலம், கலை நிகழ்வுகள், சிறந்த நூற்பரிசு வழங்கும் நிகழ்வுகள் நடைபெறும். (க-110)









## வீதிப் போக்குவரத்து விதிகள் தொடர்பான கருத்தமர்வு

சாவகச்சேரி, ஒக். 12

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இயங்கும் மாணவர் நாடாளுமன்ற நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கான வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் தனிநபர் சுகாதாரம் தொடர்பான கருத்தமர்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தென்மராட்சி வலய கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலைய உப பரிசோதகர் எஸ்.பி.ரத்நாயக்கா, பொலிஸ் சாயன்ட் எம்.எச்ஹனிபா ஆகியோரும், தனிநபர் சுகாதாரம் தொடர்பாக யாழ்ப்பாண பிராந்திய தாய் சேய் நல மருத்துவ அதிகாரி மருத்துவர் ஜீ.ரஞ்சித், சாவகச்சேரி மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.சுகன்யா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பாடசாலைகளில் இயங்கும் 18 மாணவர் நாடாளுமன்றங்களைச் சேர்ந்த 70 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான இறுவட்டுக்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. (ஐ-9)



## முல்லைத்தீவில் வாராந்தம் மூவர் விபத்தில் இறக்கின்றனர்

முல்லைத்தீவு, ஒக். 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் வரையில் வீதி விபத்துக்களில் உயிரிழந்து விடுகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி கை.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் நடைபெற்ற விபத்து தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காகப் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றோம். வாகன சாரதிகளுக்கான மருத்துவப் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. வீதியால் நடந்து செல்பவரை அல்லது வாகன சாரதியை மட்டும் குறைகூறமுடியாது. சகல மக்களுடைய ஒத்துழைப்பும், விழிப்புணர்வும் வீதி விபத்தைத் தவிர்ப்பதற்கு முக்கியமானது. விபத்துக்களில் வயது குறைந்தவர்கள்தான் அதிகளவில் உயிரிழக்கின்றார்கள். இளைஞர் [illegible] வேகமாக தமது சந்தோசத்துக்காகவே உந்துருளிகளில் இளைஞர்கள் பயணம் செய்கின்றார்கள். தமதுகுடும்பத்தையோ உயிரையோ கண்டுகொள்ளவில்லை.

பெற்றோர் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல்தான் தங்கள் பிள்ளைகளை வளர்க்கின்றார்கள். ஆனால் பிள்ளைகளுக்குள்ள ஒரு கடமை பெற்றோர்களைப் பிற்காலத்தில் கவனிக்கவேண்டியது. இவ்வாறு குறுகிய காலத்தில் இளைஞர்கள் உயிரிழக்கும்போது பெற்றோர்கள் அநாதரவாக விடப்படுவார்கள்.

போராட்டகாலங்களில் பல இழப்புக்கள் தவிர்க்கமுடியாததாக இருந்தன. அந்த இழப்புக்களை நாம் ஏற்கக்கூடிய மன நிலையில் இருந்தோம். இருந்தும் போராட்டத்தில் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் அநாதரவாக நிற்கின்றனர். அவர்கள் எந்த உதவிகளுமின்றி ஆதரவுமின்றி அநாதரவாக நிற்கின்றார்கள்.

பெற்றோர்கள் எதிர்காலத்தில் பல பாதிப்பைச் சந்திப்பார்கள் என்று எண்ணுவதில்லை. வாகனங்களை இனிமேல் வேகமாக ஓடாதீர்கள். இளைஞர்களிடம் நாம் வேண்டு[illegible]ங்கள் சாதனைகளை கல்வியில் காட்டுங்கள், தொழிலில் காட்டுங்கள்- என்றார். (கு-ரி3)




## வீதிப்பாதுகாப்பு தொடர்பாக முல்லைத்தீவில் நடைபவனி

முல்லைத்தீவு, ஒக். 12

வீதிப்பாதுகாப்பு தொடர்பாகப் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கிலான நடைபவனி முல்லைத்தீவு மாவட்டச் செயலக முன்றலிலிருந்து ஆரம்பித்து முல்லைத்தீவு நகர்ப்பகுதி வரை நேற்று நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள், மாவட்டச் செயலக, பிரதேச செயலக அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் [illegible]வதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் உள்ளிட்ட அதிகாரிகள், அலுவலர்கள் வீதிகளில் சென்ற மக்களுக்கும் வாகனச் சாரதிகளுக்கும் வீதிப்பாதுகாப்புத்தொடர்பான விழிப்புணர்வுத் துண்டறிக்கைகளை வழங்கினர் என்று [illegible]ப்பட்டது. (கு-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய முடிவுகளை எடுக்க நாளை கூடுகின்றது ரெலோ

யாழ்ப்பாணம், ஒக்.12

அரச தலைவர் தேர்தலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தவிசாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் போட்டியிடுவது உட்பட முக்கிய விடயங்களை ஆராய்வதற்காக அந்தக் கட்சியின் தலைமைக்குழு நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூடவுள்ளது.

இந்தக்கூட்டத்தில்சிவாஜிலிங்கத்தின் விடயம், எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது போன்ற விடயங்கள் பேசப்படவுள்ளன என்றும், கட்சியின் தலைமைக்குழுவின் 21 உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் கட்சியின் தவிசாளர் எம். கே. சிவாஜிலிங்கம் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளார். கட்சியில் இருந்து விலகும் கடிதத்தையும் அவர் கட்சியின் செயலாளரிடம் கையளித்துள்ளார். அவரின் இந்தச் செயற்பாடு தொடர்பாக கட்சிக்குள் அதிருப்தி எழுந்துள்ளது.

அதேவேளை, எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் எந்தத் தரப்புக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் அறிவிக்கவில்லை. அதனால் பங்காளிக் கட்சிகள் அது தொடர்பாக முடிவெடுக்க முடியாது உள்ளன. அது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் பேசப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# தமிழ் மக்களை கொன்றவர்கள் நல்லவர்களாக நடிக்கின்றனர்

## வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.12

தமிழ் மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்றுகுவித்தவர்களே தற்போது தமிழர்களின் நலன் குறித்து கருத்துரைக்கின்றனர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கண்டியில் நடத்திய பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வாக்குவேட்டைக்காக பேரினவாதத்தையும்சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தையும் மட்டுமே முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்தும் கூட்டு எதிரணியின் பக்கம், அரசியல் கைக்கூலிகளாக சில தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் செயற்படுவது வெட்கி தலைகுனியவேண்டிய விடயம்.

தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக வழமைபோல் 'நல்லவர்கள்' வேடம் பூண்டு ராஜபக்சக்களும் அவர்களின் சகாக்களும் பல்வேறு உறுதிமொழிகளை வாரி வழங்கி வருகின்றனர். அவர்களின் சொல் ஜாலங்களைக்கண்டு ஏமாந்து வாக்குகளை வாரி வழங்குவதற்கு தமிழ் பேசும் மக்கள் கொண்டை கட்டிய சீனர்கள் அல்லர் என்பதை ராஜபக்ச படையணி புரிந்துகொள்ள வேண்டும்.

தாங்கள் ராஜபக்சக்களுக்கு எதிரானவர்கள் என அடையாளப்படுத்திக்கொண்டு மறைமுகமாக கூட்டு எதிரணியை வலுப்படுத்துவதே சிலரின் உள்நோக்கமாகும். மறுபுறத்தில் தமிழ், முஸ்லிம் வாக்குகளை சிதறடிப்பதற்காக சிலர் வேண்டுமென்றே அரச தலைவர் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். வழமையை விடவும் மக்கள் இந்த முறை விழிப்பாகவே இருக்கவேண்டும்.

தமிழ் மக்களை கொத்துக்கொத்தாகக் கொன்றுகுவித்தவர்கள் இன்று வடக்குக்கு சென்று அலுவலகங்களை திறந்து, தாங்கள்தான் தமிழர்களின் மீட்பர்கள் எனக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர். எந்த முகத்தை வைத்துக் கொண்டு வடக்கு மக்களிடம் ராஜபக்ச படையணி வாக்கு கோருகின்றது?" என்று கேள்வி எழுப்பினார். (எ)

# காலி முகத்திடல் மக்கள் கூட்டம் இலங்கை வரலாற்றில் முதலிடம்

## சஜித்தின் வெற்றி நிச்சயம் என்கிறார் அமைச்சர் மனோ



கொழும்பு, ஒக்.12

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசதலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் கூடிய மக்கள் கூட்டம் இலங்கை வரலாற்றில் முதலிடம் பெற்றுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதனூடாக சஜித்தின் வெற்றி உறுதியாகிவிட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, கொலைகார ராஜபக்ச கும்பலுக்குப் பாடம் புகட்டவே இந்த மக்கள் வெள்ளம் திரண்டது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (எ-22)

# அனைத்துக் கட்சிகளும் ஒப்பமிடுவது சந்தேகம்

## சிறிகாந்தா கூறுகின்றார்



யாழ்ப்பாணம், ஒக்.12

தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் ஒருமித்த கருத்தை எட்டுவது தொடர்பில் தயாரிக்கப்படும் பொது இணக்கப்பாட்டு அறிக்கையில் சந்திப்பில் கலந்துகொள்ளும் 6 கட்சிகளும் ஒப்பமிடும் என நான் கருதவில்லை என ரெலோவின் செயலாளர் என்.சிறீக்காந்தா தெரிவித்தார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பொது இணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான 3வது கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வடக்கு , கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே என்.சிறீகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

6 தமிழ் அரசியல் கட்சிகளும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் ஒருமித்த கருத்தை எட்டுவது தொடர்பிலேயே இந்தத் தொடர் சந்திப்புகள் இடம்பெறுகின்றன. அதில் தயாரிக்கப்படும் பொது இணக்கப்பாட்டு அறிக்கையில் கட்சிகளின் தலைவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கூடி ஒப்பமிட தீர்மானித்துள்ளனர். அவ்வாறு ஒப்பமிடும் பொது இணக்கப்பாட்டு அறிக்கையை முதன்மை வேட்பாளர்களிடமும் பன்னாட்டுப் பிரதிநிதிகள் முன்பும் கொண்டு செல்ல தீர்மானிக்கப் பட்டுள்ளது. இருப்பினும் அந்த பொது அறிக்கையில் ஆறு கட்சிகளும் ஒப்பமிடும் என நாம் கருதவில்லை. ஏனெனில் நாம் தமிழர்கள் ஆனால் ரெலோ நிச்சயமாக ஒப்பமிடும் -என்றார். (எ-105)

# சிறை செல்லும் நிலையிலேயே பல அரசியல்வாதிகள் உள்ளனர்

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.12

நாட்டில் முக்கிய பிரச்சினைகளுக்கு காரணமான அரசியல்வாதிகளை சட்டத்தின் முன் நிறுத்தினால் அவர்களில் பெரும்பாலானோர் வெலிகடை சிறைசாலைக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2015ஆம் ஆண்டு நாங்கள் மகிந்த ராஜபக்ச அரசைத் தோற்கடித்து புதிய அரசை உருவாக்க வாக்களித்தோம். ஆனால் தேர்தலுக்குப்பின்னரும், இதற்கு முற்பட்ட காலங்களில் காணப்பட்ட அரசைத்தான் காணக்கூடியதாக இருந்தது.

மக்களாகிய நீங்கள் ஐக்கிய தேசிய கட்சியை தோற்கடித்து கோத்தபாய தலைமையில் புதிய அரசை உருவாக்க நினைப்பது தவறு. காரணம், நல்லாட்சி அரசைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோனர்களே தற்போது கோத்தபாயவுடன் இணைந்துள்ளார்கள். ஆகையால் புதிய தொரு மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பேசிய மகிந்த, விவசாயம் மற்றும் போக்குவரத்து சேவை ஆகியவற்றை இந்த அரசும் அழித்துள்ளது என்றார். அப்போது முன்னாள் விவசாய அமைச்சர் துமிந்த திசநாயக்க மற்றும் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோர் அந்த மேடையில் இருந்தனர். அந்தப் பிரச்சினைக்கு காரணமானவர்களே மகிந்தவின் பேச்சைக் கேட்டு கைதட்டுகின்றனர்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அரைவாசி அரசியல்வாதிகள் வெலிகடை சிறையிலேயே இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதேபோன்று சஜித்துக்கு ஆதரவு வழங்க மக்கள் தீர்மானித்தாலும் அங்கு தலைமை அமைச்சர் ரணில், கருணாநாயக்க ஆகியோரும் ஆட்சியில் இருப்பார்கள். ஆகையால் பொதுமக்கள் முன்னணி மற்றும் புதிய ஜனநாயக முன்னணியால் சட்டம், ஒழுங்கை கொண்ட நாட்டை ஒரு போதும் உருவாக்க முடியாது. என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவை தோற்கடிக்கவே 35 வேட்பாளர் களமிங்கியுள்ளனர்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.12

நாட்டின் எதிர்காலக் கொள்கைகளை வெளியிடுவதற்குப் பதிலாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியை விமர்சிப்பதே ஐக்கிய தேசியக் கட்சிகளின் முக்கிய நோக்கமாகவுள்ளது. கோத்தபாய ராஜபக்சவின் முக்கிய வாக்குகளைச் சிதைப்பதற்காகவே அரச தலைவர் தேர்தலில் 35 வேட்பாளர்கள் இந்த முறை களமிறங்கியுள்ளனர். இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ச.

குருணாநாகல் மாவட்டத்தில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பது நடக்காது. ஐக்கிய தேசியக் கட்சி தமது திட்டங்களை அறிவிக்கக் கூட்டங்களை நடத்தவில்லை. எம்மை விமர்சிக்கவே கூட்டங்களை நடத்துகின்றது. 2015ஆம் ஆண்டு கூறிய கதைகளை மீண்டும் கூற ஆரம்பித்துள்ளனர்.

அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளாகச் செய்தவற்றைக் கூறவில்லை. மத்திய வங்கிப் பிணை



முறி ஊழல் தொடர்பாக எவரும் வாய்திறக்கவில்லை. ஆட்சியைக் கைப்பற்றியவுடன் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவோம் என்று கூறியவர்கள் மேல் நீதிமன்ற நீதவானைப் பதவி நீக்கியமை தொடர்பில் பேசவில்லை.

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரச தலைவரின் செயலாளரை இந்த அரசு சிறையிலடைத்தது. இந்த அரசில் இவ்வாறு பலரும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானார்கள். பழிவாங்கலையே பிரதானமாகக் கொண்டிருந்ததால் நாட்டுக்கு சேவை செய்வதற்கு அரசுக்கு நேரம் இருக்கவில்லை.

என்னால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு பெறப்பட்ட வெளிநாட்டு கடனை மீளச் செலுத்துவதற்கு அதை விட மூன்று மடங்கு அதிக கடன் பெற வேண்டிய தேவை ஏற்பட்டது என்று கூறுகின்றார்கள். ஆனால் மேலதிகமாகப் பெறப்பட்ட கடனுக்கு என்ன ஆயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை. - என்றார். (ஏ)

# 16 ஆம் திகதி நடக்க இருப்பது நீதிபதி தெரிவு தேர்தல் அல்ல

## தம்பர அமில தேரர் கோத்தாவுக்கு பதிலடி



கொழும்பு, ஒக்.12

அடுத்தமாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது அரச தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலே தவிர நீதிபதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் அல்ல என்று கலாநிதி தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலி முகத்திடலில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் தான் நவம்பர் 17ஆம் திகதி அரச தலைவரானதும் அநீதியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களை விடுதலை செய்வேன் என்று கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளார்.

அநீதியான முறையில் அவர்களை சிறையில் அடைத்தது யார் என கேட்கின்றேன். மகிந்த ராஜபக்ச குடும்பத்தின் தேவைகளுக்காக இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை வீரர்களைத் தவறான முறையில் பயன்படுத்தி ஊடகவியலாளர்களை கொலை செய்வதற்கு அனுப்பினர்.

அவர்களை ஊடகவியலாளர்களைக் கடத்துவதற்கும் கப்பம் பெறுவதற்கும் அழைத்துச் சென்றனர். அவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடுத்துவதற்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களே இன்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் சந்தேகநபர்கள். அவர்கள் குற்றவாளிகள் என நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. அவர்களை விடுதலை செய்வதாக தற்போது இவர் கூறுகின்றார்.

நவம்பர் 16ஆம் திகதி அரச தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலே நடைபெறவுள்ளது. நீதிபதிகளை தெரிவு செய்யும் தேர்தல் அல்ல. - என்றார். (ஏ)

# ஊவாவில் சஜித் சூறாவளி பரப்புரை

கொழும்பு, ஒக்.12

ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச நாளை ஊவா மாகாணத்தில் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார் என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மொனராகலை நகர மைதானத்திலும், வெள்ளவாய நகர மைதானத்திலும், பசறை பொது மைதானத்திலும், ஹாலிஎல பொது விளையாட்டு மைதானத்திலும், ஹப்புத்தளை நகர் பொது மைதானத்திலும் நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களில் பங்குபற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரப்புரைக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்றும் அ. அரசவிந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஏ)

# இனவாதி என்பதை கோத்தா மீண்டும் நிரூபித்து விட்டார்

## சிவமோகன் எம்.பி. சாடல்

கொழும்பு, ஒக். 12

கோத்தபாய தான் ஒரு இனவாதி என்பதை மீண்டும் காட்டியுள்ளார் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறும் அரச தலைவர் தேர்தலில் தான் வெற்றி பெற்றால் 17 ஆம் திகதி சிறையில் உள்ள அனைத்து இராணுவத்தினரையும் விடுதலை செய்வேன் என்ற இனவாத பேச்சுடன் அனுராதபுரத்தில் தனது பரப்புரையை ஆரம்பிரிருக்கிறார் கோத்தபாய ராஜபக்ச.

பல்லின மக்கள் வாழும் இலங்கை தேசத்தில் அரச தலைவரானவர் அனைத்து இனங்களையும் சமனாக பார்க்க வேண்டும். தமிழர்களின் உரிமைக்காக போராடி அரசியல் கைதிகளாக இருபது வருடங்களுக்கு மேலாக சிறையில் தவிக்கும் தமிழ் அரசியல் கைதிக



**தமிழ் மக்களை புறக்கணித்து சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் தனித்து ஆட்சி அமைத்துவிட முடியாது. அது எவராக இருந்தாலும் சரி உங்கள் குறிப்பேடுகளில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.**

ளின் விடுதலையை புறக்கணித்து சிங்கள இராணுவத்துக்காக மனமிறங்கி பேசும் கோத்தபாயவை தமிழ் மக்கள் எவ்வாறு நம்புவது?. கோத்தபாயவினது வருகை தமிழ் மக்களுக்கு ஆபத்தான தாகவே அமையும்.

சிறையில் உள்ள சிங்கள இராணுவத்தினர் பல சமூக குற்றங்களிலும் ஈடுபட்டமைக்காகச் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக கூறும் கோத்தபாய ஏன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிவாய்திறக்கவில்லை?. சிங்கள ஆட்சியாளர்களின் இதயம் இரும்பால் ஆனது. தமிழ் மக்கள் சுய கௌரவத்துடன் வாழ்வதை அவர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள் என்பது இதிலிருந்து தெரிகின்றது.

தமிழ் மக்களை புறக்கணித்து சிங்கள ஆட்சியாளர்களால் ஒருபோதும் தனித்து ஆட்சி அமைத்து விட முடியாது. அது எவராக இருந்தாலும் சரி உங்கள் குறிப்பேடுகளில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். சிங்கள வேட்பாளர்களின் வெற்றியை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களே தீர்மானிப்பார்கள். இனவாத விசத்தை உமிழாத ஒருவரையே தமிழ் மக்கள் விரும்புவார்கள். - என்றார். (எ-213)

# மைத்திரியின் நடுநிலமை முடிவு மிகவும் சரியானது

## மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.12

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நடுநிலமை வகிப்பது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள முடிவு நல்ல விடயம் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மாவத்தகமவில் நடைபெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அலுவலக திறப்பு விழாவின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த நாடு சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக நாடாளுமன்றில் தெரிவிக்கும் எந்தவொரு கருத்தையும் தலைமை அமைச்சர் காதில் வாங்கிக்கொள்கிறார் இல்லை.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நடுநிலை வகிப்பது என்று அரச தலைவர் எடுத்த முடிவு நல்லது. அதேநேரம், சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள அனைவரும் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிப்பதற்கு முடிவெடுத்துள்ளார்கள்.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் நல்ல முடிவு கிடைக்கும். அதைக் கொண்டாடத் தயாராகுங்கள் என கட்சி ஆதரவாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த வெற்றி, எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி கோத்தபாய அரச தலைவர் தேர்தலில் வெல்வதற்கான ஆரம்பமாகும். - என்றார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியை புறம்தள்ளி வெற்றியடைய முடியாது

## வீ. ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

தமிழர் விடுதலைக் கூட்டணியை புறக்கணித்துவிட்டு எந்த செயற்பாட்டிலும் வெற்றியடைய முடியாது என கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது

ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாட்டை தட்டிக் கேட்கும் தகுதியும், துணிவும் கூட்டணிக்கு மட்டுமே உண்டு. தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒதுக்கி வைத்துவிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஏதாவது ஒன்று வெற்றி பெற்றுள்ளதா என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒதுக்கும் தமிழ் அமைப்புக்கள் சிந்திக்க வேண்டும்.

1972இல் தமிழர் கூட்டணி உருவாகி 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணியானதற்கு பின்னர் 2004வரை எமது தலைவர்கள் விடுதலை இயக்கங்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும், தற்கொலை குண்டுதாரிகளுக்கும் இரையாகிய பின்னரும் கூட்டணி சோர்ந்து போகாது தனது இலட்சிய பயணத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

தற்போதும் கூட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அமைப்பு எம்மை ஒதுக்கி வைத்துவிட்டு அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்துகின்றது. இதே பல்கலைக் கழக மாணவர்கள் எம்மை ஒதுக்கிவைத்துவிட்டு 2004ஆம் ஆண்டு தேர்தலில் அதி உக்கிரமமாக எங்களுக்கு எதிராக குரல் கொடுத்து, ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை ஜனநாயக விழுமியங்களை மீறி ஒரு சிலருக்கு பெற்றுக் கொடுத்தனர்.

ஆனால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக ரீதியில் எதனையும் தட்டிக் கேட்க முடியாமல், முள்ளிவாய்க்கால் வரை எமது மக்கள் சென்று அவலப்பட்டதை வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அரசின் அத்துமீறல்கள் மற்றும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் போன்றவற்றை ஒரு ஜனநாயக ரீதியில் போராடும் அமைப்பால் மட்டுமே தட்டிக் கேட்க முடியும். ஜனநாயகத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் பேரம் பேசி தட்டிக் கேட்க முடியாது.

எம்மைப் போன்ற ஜனநாயகவாதிகள் நாடாளுமன்ற அரசியலில் பலமாவதை எந்த அரசும் விரும்பாது. அரின் இந்த நிகழ்ச்சி நிரலுக்கு தெரிந்தோ தெரியாமலோ பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பும் ஏனைய அமைப்புகளும் செயற்படுகின்றன. அதனால்தான் எமது கட்சி திட்டமிட்டே ஒதுக்கப்படுகிறது. இருந்தாலும் எமது ஜனநாயகத்தின் குரல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். என்றுள்ளது. (எ)

# நாட்டு மக்களின் பிரச்சினை கோத்தபாயவுக்கு தெரியாது

## நவீன் திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12

எதிரணியின் வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கு இந்த நாட்டில் வாழும் அடிமட்ட மக்களின் பிரச்சினைகளும், கஷ்டங்களும் தெரியுமா? ஆனால் சஜித் பிரேமதாஸ மக்களோடு மக்களாக நின்று, அவர்களின் பிரச்சினைகள் என்னவென்பதை நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சருமான நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாங்கள் மிகவும் முக்கியமானதொரு காலகட்டத்தில் இருக்கின்றோம். எமக்கிடையில் எவ்வித பேதங்களோ அல்லது முரண்பாடுகளோ இல்லை. நாங்கள் அனைவரும் ஒருமித்த குரலில் சஜித் பிரேமதாசவை வெற்றி பெறச் செய்வதற்காகக் கை கோர்த்திருக்கின்றோம்.

எமக்கு திடீரென்று மேலே இருந்து குதிக்கின்ற ஒரு தலைமைத்துவம் தேவையில்லை. மாறாக மக்களுக்காகச் சிந்தித்து செயற்படக்கூடிய, ஜனநாயகத்தன்மை மிக்க, மனிதநேயமுள்ள சஜித் பிரேமதாசவைப் போன்ற தலைவரே தேவை. - என்றார். (எ)

# அரச தலைவர் தேர்தல் தொடர்பில் பொது இணக்கப்பாடு ஏற்படலாம்

## தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை ஒரே குரலில் வெளிப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வந்த கலந்துரையாடல்கள் மூலம், சந்திப்பில் பங்குகொண்ட 6 கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வரும் ஏது நிலை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பில் பங்குகொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கும் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பொதுவான நிலைப்பாட்டை எடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் அடிப்படையில் அரச தலைவர் வேட்பாளர்களிடமும், அவர்களின் பின்புலத்தில் இயங்கும் வல்லரசுகளிடமும் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கைகளை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிப் பொது அறையில் 3 ஆவது சந்திப்பு நடைபெற்றது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கட்சிப் பிரதிநிதிகள் கூடி அதற்கான உடன்படிக்கையில் கையொப்பமிடுவார்கள் என்று அதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் வலி வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சட்டத்தரணி சுகாஸ் கனகரட்ணம், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் க. அருந்தவபாலன், புளொட் சார்பில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், ஈ.பி.ஆர்.எல்.எஃவ் சார்பில் அதன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ இயக்கத்தின் சார்பில் அதன் செயலாளர் நாயகமும், மூத்த சட்டத்தரணியுமான என். சிறீகாந்தா ஆகியோர் கலந்து கொணடனர்.

சந்திப்பில் பங்குபற்றிய 6 கட்சிகளும் பொது இணக்கப்பாடொன்றுக்கு வரும் ஏது நிலைகள் தோன்றியுள்ளது என்றும், மாணவர்கள் தொகுத்துள்ள ஆவணத்தில் ஒப்பமிடுவதற்கு அனைத்துக் கட்சிகளும் கொள்கையளவில் இணங்கியுள்ளன என்றும் சந்திப்பின் பின்னர் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிக்கும் நிலைப்பாட்டை ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், தமிழர் தரப்பு கோரிக்கைகளுக்கு வேட்பாளர்கள் இணங்கிவருவார்கள் என்ற நிலை தோன்றினாலெழிய தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யப் போவதில்லை என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பில் சந்திப்பில் கலந்து கொண்ட சட்டத்தரணி சுகாஸ் கனகரட்ணம் தெரிவித்தார். (எ-105,ரி1)

# 55 வீதத்துக்கு அதிக வாக்குகளை பெற்று வெல்வார் கோத்தபாய

## டிலான் பெரேரா நம்பிக்கை

கொழும்பு, ஒக்.12

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி 55 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும். தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த முறை அரசியல் ரீதியான சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இனக் கலவரம், விடுதலை புலிகளின் எழுச்சி ஆகியவற்றிற்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசே வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தது. 2015 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சிகளாலேயே ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இந்த முறையும் அதற்கான முயற்சிகளை ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுக்கின்றது.



தமிழ் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் தொடர்பில் தவறான சித்தரிப்புக்களை முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ் முஸ்லிம் மக்கள் இம்முறை அரசியல் ரீதியான சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும்.- என்றார். (எ)

# தேர்தல் விதி மீறல்: இதுவரை 256 முறைப்பாடு

கொழும்பு, ஒக்.12

அரச தலைவர் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுப் பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதுவரை தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 269 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி முதல் இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை அரச தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 16ஆம் திகதி நடக்கவுள்ளது. (எ)

# சுங்க அதிகாரிகள் இருவருக்கு பிணை

கொழும்பு, ஒக்.12

முன்னாள் சுங்க பணிப்பாளர் நாயகம் ஜகத் விஜேவீர மற்றும் முன்னாள் மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம் தாரக செனவிரத்ன ஆகியோருக்குக் கொழும்பு தலைமை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

ஜகத் விஜேவீர மற்றும் தாரக செனவிரத்ன ஆகியோரை உடனடியாக கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டிருந்தமைக்கு அமைவாக கடந்த மாதம் 27 ஆம் திகதி பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவின ரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள், பிணை கோரி கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவை பரிசீலித்த நீதிபதி, அவர்கள் இருவருக்கும் பிணை வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளார் (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்தங்கிய கிராமப் பாடசாலையில் 4 மாணவர்களுக்கு அதிக புள்ளிகள்

கிளிநொச்சி.ஒக்.12
தரம்5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தில் 4 மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி, போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதி வாய்ப்புக்களற்ற மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் கோணாவில் காணப்படுகின்றது.

அங்குள்ளகோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்ற இராசலிங்கம் கேதுசனன்194புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

அத்துடன் இந்தப்பாடசாலையில் சந்திரகுமார் கபிலன் 183 புள்ளிகளையும், ஞானப்பிரகாசம் சன்சிகா 168 புள்ளிகளையும், இராமநாதன் கஜானி 162 புள்ளிகளையும் பெற்றுச் சித்திய டைந்துள்ளனர். (க-426)

# நகர உணவகங்களில் ‘லஞ்ச்சீற்’றுக்கு தடை

## முதலாம் திகதி தொடக்கம் நடைமுறை

யாழ்ப்பாணம், ஒக். 12
யாழ்ப்பாண மாநகர சபை ஆளுகைப்பரப்புக்குள்ளந்தவொருஉணவகங்களிலும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம்‘லஞ்சீற்’பயன்படுத்தமுற்றாகத் தடை விதிப்பதாக மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பரப்புக்குள் முதற்கட்டமாக லஞ்சீற் பாவனை தடை செய்யப்பட்டே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதாவது கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டியதே கட்டாயமாகஇருந்தபோதும்அதனை உரிமையாளர்மீறும்குற்றத்துக்காக வாய்இல்லாஜீவன்களைத்தண்டிக்க முடியாது. அந்த வகையில் நகரின் மத்தியில் மட்டுமன்றி கால்நடைகள் உணவுடன் இந்த லஞ்சீற்களையும் உட்கொள்வ தால் பல கால்நடைகளை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று தெரு நாய்களுக்கும் இந்த நிலமையே காணப்பட்டது. தற்போது இவை அனைத்தையும் தாண்டி குப்பைகள் தரம்பிரிக்காது கல்லுண்டாய்ப் பகுதிக்குக் கொண்டசெல்ல முடியாது என்பது நீதிமன்றக் கட்டளை.

அதனால் லஞ்சீற் பயன்படுத்தும் உணவக கழிவுகளை தரம் பிரிக்க முடியவில்லை. குறிப்பாக அசைவ உணவகம்எனில்அதில்அதிகசிரமம் காணப்படுகின்றது.

எனவே தற்போது முதற்கட்டமாக சகல உணவகங்களிலும் நெகிழக்கூடிய மற்றும் நெகிழும் தன்மை அற்ற எந்தவகை லஞ்சீற்றும் முதலாம்திகதிதொடக்கம்பாவனைக்குத் தடை விதிக்கப்படுகின்றது.

அதனை மீறி லஞ்சீற் பயன்படுத்தினால்அந்தஉணவகங்கள்கழிவு அகற்றுவதில் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும். என நேற்றுமுன்தினம்நடைபெற்றமாநகரசபையின் மாதாந்த அமர்வில் தெரிவித்தார். (து-105)

## இறம்பைக்குளம் மாணவி 190 புள்ளிகளால் சித்தி



வவுனியா,ஒக்.12
2019 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி சுவேதா சிவஜங்கரன் 190 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்து ள்ளார்.

குறித்தபாடசாலையில்பரீட்சைக்குத் தோற்றிய 169 மாணவர்களில் 81 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்குமேல்பெற்றுசித்தியடைந்துள்ளனர். 101151க்கு இடைப்பட்ட புள்ளிகளை76மாணவர்களும் ,71100க்கு இடைப்பட்டபுள்ளிகளை10மாணவர்களும், 0070 க்கு இடைப்பட்ட புள்ளிகளை 2 மாணவர்களும் பெற்றுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை தெரிவித்துள்ளார். (க-ரி4)

## வரலாற்றில் முதற்தடவையாக பாடசாலைக்கு கிடைத்த பெருமை



வவுனியா.ஒக்.12
வவுனியாவில் பின்தங்கிய பிரதேசமான சின்னத்தம்பனை சிறி கிருஸ்ணா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் முதற் தடவையாக மாணவி யொருவர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திய டைந்துள்ளார். குணநீதன் வித்தியா என்ற மாணவியே 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். மாணவியை கற்பித்த எஸ். சாந்தமூர்த்தி ஆசிரியரையும் பாடசாலை சமூகம் பாராட்டியுள்ளது. (க110)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.12
சமூகவிஞ்ஞானப்படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் ‘சீனப் புரட்சியின் 70 ஆவதுஆண்டுநிறைவும் இன்றைய சவால்களும் என்றதலைப்பில்சிறப்புக் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாலில் ஆரம்பஉரையைபி.முத்துலிங்கமும், முதன்மை கருத்துரையை மு.இராசநாயகமும்ஆற்றவுள்ளனர். இவ் உரைகளைத் தொடர்ந்துகலந்துரையாடல் இடம்பெறும். (ஐ)



உளநல நாளை முன்னிட்டு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், “ குழந்தைகளின் உலகம் முதியோர்களை பாதுகாத்தல்” என்னும் தலைப்பிலான நிகழ்ச்சித்திட்டம் வயாவிளான் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (க)

# பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.12
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகின. இவற்றில் பாடசாலைரீதியாக மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு

**கந்தரோடைஸ்கந்தவரோதயாஆரம்பப் பாடசாலை**
சு.றோகிற்கெஷான் - 187, ம.தஸ்மியா - 184,சூ.சுயாணா - 175, பி சோவன்யா -173, சு.சுஜன் - 167, சு.ஹர்சயன்165, மு.தீபிகா - 164, க.வர்ஷா - 163, சு.அபிசுயன் - 160, நா.அனுஸ்கா - 159, ப.தருணிகா - 156, து.பிரியங்கா - 153, ர.சம்ஸ்ருதிகா - 153, வல்லை மகளிர் மகா வித்தியாலயம், க.ரோஜினி - 170, ப.மாதங்கினி - 162, க.விதுஷன் - 157, பா.வசீகரன் - 156, கி.கிஷாந் - 153, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, சு.பிரணவன் - 165

**மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**
சி.கேஹுகா - 160, ந.நிகல்யா - 154, த.விசாலிகா - 154 ,

**அளவெட்டி அ.மி.த.க. பாடசாலை**
யே.அஸ்வின் வில்லியம் - 181, ரா.தர்சிகா - 159
உடுப்பிட்டிசைவபிரகாசவித்தியாசாலை சு.ஆருஜன் - 164, சி.கஜுசியா - 159,

**வட இந்து ஆரம்ப பாடசாலை**
அ.பிருந்தன்- 183, க.பிரஷாம் - 182, ம.டிவாகரன்-175,கி.விஸ்ணுராஜ்-174, ஜெ.தர்விகா - 172, சு.கேம்சிதா - 171, யோ.அம்சவி - 171, சி.ஹம்சாகரினி - 170,மு.அன்பினி-170,ஜெ.லிபென்சன் -167,இ.நிசானி-166,ம்.தினேஸ்-166, ம.நிலக்சியா - 165, பொ.சுமிட்சனா -163,உ.நவீன்-163,க.சுகன்யன்-160, அ.தர்சனா - 160, சி.அட்ஷயா - 159, ஜெ.அஸ்விதா-158,ம.சன்சயன்-157, ஜெ.அக்சயா - 157, சி.ரிசிகேசன் - 156, சூ.சாய்வைபவ் - 156, ம.கயூரா - 156, ச.சாருக் - 155, ப.விகிர்தன் - 155, ப.வகிர்தன் - 155, கி.இராகவீகா - 154, பி.திவ்யபிரபா - 153, ர.ஆர்த்தி - 153

**சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்**
பு.குபேரன் - 158, பு.துஷ்யந்தன் - 158, பு.லக்ஷயன் - 156, மலவநேசகுமார் - 153

## வாணி விழாவும் வித்தியாரம்பமும்





கொடிகாமம், ஒக்.12
கிளிநொச்சி இந்து கல்லூரியின் வாணி விழாவும், வித்தியாரம்ப நிகழ்வும் நேற்றுமுன்தினம் பாடசாலை முதன்மை மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முன்பள்ளிக் கல்வியை தொடரவுள்ள பிள்ளைகளுக்கு கல்லூரி அதிபரால் ஏடு தொடக்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் வாணி [illegible] நடத்தப்பட்ட கோலம் போடுதல், மாலை கட்டுதல்,தோரணம் [illegible] ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காஷ்மீர் முடக்கத்தால் பொருளாதாரப் பாதிப்பு

புதுடெல்லி,ஒக்.12

இந்திய நிர்வாகத்தின் கீழ் உள்ள காஷ்மீர் பகுதி இந்திய இராணுவத்தால் முடக்கப்பட்டிருப்பதன் காரணமாக அந்தப் பிராந்தியத்தின் பொருளாதாரம் இரண்டு மாதங்களில் 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்று தொழில் துறை நிபுணர்கள் கூறுகின்றனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள குறித்த காஷ்மீர் பகுதியில் பல விடுதிகள், உணவகங்கள் உள்ளன.

அங்கு நீடிக்கின்ற இந்திய இராணுவத்தினரின் ஒடுக்குமுறைகள் அச்சுறுத்தல்களால் காஷ்மீரை நாடுகின்ற சுற்றுலாப் பயணிகள், இந்து யாத்திரிகர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் அங்கு ஊரடங்கு நடைமுறைக்கிடப்பட்டதில் இருந்து இற்றை வரை இயல்பு நிலமை எட்டாமல் இருப்பதால் காஷ்மீரில் இணையம், தொலைத்தொடர்பு சேவைகள், போக்குவரத்து எனப் பலவழிகளிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 4இலட்சம் தொழிலாளர்கள் காஷ்மீரிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனால் அங்குள்ள 7இலட்சம் மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கிய சுற்றுலாத்துறை தொழில் முடங்கியுள்ளது. அத்தோடு காஷ்மீரின் புகழ்பெற்ற அப்பிள் தோட்டங்களின் வர்த்தகமும் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பல காரணங்களால் காஷ்மீரின் பொரு ளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வீதியில் படகை நிறுத்திப் போராட்டம் காலநிலை ஆர்வலர்கள் 60பேர் கைது

## அமெரிக்காவில் சம்பவம்

வோஷிங்டன்,ஒக்.12

வீதியில் படகை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்ட 62 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்தது. கைது செய்யப்பட்டவர்கள் காலநிலை மாற்றத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

காலநிலை மாற்றத்துக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உலகம் முழுவதும் உள்ள காலநிலை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். பல்வேறு இடங்களில் காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டங்கள் நடந்தன. இந்த நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள மான்ஹாட்டன் பகுதியில் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்திச் சூழல் ஆர்வலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'உடனடியாகச் செயற்படு' என்ற வாசகம் எழுதப்பட்ட பச்சை நிறப் படகு ஒன்றை வீதியில் நிறுத்தி, செம்மஞ்சள் நிற அங்கிகளை அணிந்து போராட்டம் நடத்தினர். இதனால் அந்த வீதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு போராட்டம் நடத்திய 62 பேரைக் கைது செய்தனர்.







சிரியாவின் வட பகுதியில் நிலைகொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதலை ஆரம்பித்துள்ளது. துருக்கியின் இந்தத் தாக்குதலால் அந்தப் பகுதி மக்களில் பலர் இடம்பெயர்ந்தனர். குறித்த பகுதியில் துருக்கி மேற்கொண்டு வரும் தாக்குதல் குறித்த ஒளிப்படத் தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரொய்டர்ஸ்.



## இன்றைய நாள்

**மேடம்:** புதியவர்களின் உதவி கிடைத்து மனதில் ஊக்கம் வளரும். தொழில், வியாபார நடைமுறையில் சில மாற்றம் செய்வீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** இனிய வார்த்தை பேசி நற்பெயர்பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். பண பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு. புத்திரரின்நற்செயல்பெருமைதேடிதரும்.

**மிதுனம்:** உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். கடினமான பணிகளில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். மனைவி உதவிகரமாக நடந்து கொள்வார்.

**கடகம்:** சுற்றுப்புற சூழ்நிலையை கவனத்தில் கொண்டு செயல்படுவது நல்லது. தொழிலில் அதிக உழைப்பால் உற்பத்தி, விற்பனை சீராகும். சத்தான உணவு உண்பதால் உடல் ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள் நகை இரவல்

**சிம்மம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உபரி பணவரவு உண்டு. உறவினர் பாசத்துடன் உதவுவார்.

**கன்னி:** புதிய விஷயங்களில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற சில மாற்றம் செய்வீர்கள். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**துலாம்:** சொந்த தேவைகளை நிறைவேற்றுவதில் கவனம் கொள்வீர்கள். தொழிலில் வளர்ச்சி பெற கால அவகாசம் தேவைப்படும். புத்திரரின் திறமைமிகு செயல் மனதை மகிழ்விக்கும்.

**விருச்சிகம்:** பணிகளில் முன் யோசனையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணி உருவாகும். சுற்றுப்புற சூழ்நிலை தொந்தரவால் நித்திரை தாமதமாகலாம்.

**தனுசு:** அன்பு வழியை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாகும். நீண்ட கால பண கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். தொழிலில் இடையூறுகளை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு சிறப்பாக நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். மனதை செம்மைப்படுத்தி கொள்வது அவசியம். தொழில், வியாபாரம் நண்பரின் உதவியால் வளர்ச்சி பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DMI COMPUTER EDUCATION

TVEC Reg.No.P25/0004

- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application
- Dip.in Microsoft Office
- Dip.in Web Designing
- Hardware,Mulitmedia, Auto CAD,Java,C++,PHP

NVQ COURSES( ICT-Full Time,CAA Full/Part Time)

ஆங்கிலம் பேச,எழுத,வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
**Diploma in English**
**Spoken English**

**IT & ENGLISH**
DUAL DIPLOMA

**NVQ Courses**
- ICT (Full Time- 6 Months)
- CAA (Full Time- 3 Months)
- CAA (Part Time- 6 Months)

அரச சான்றிதழ்கள்
பதிவுகளினை 15/10/2019 க்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

**சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்**
Sinhala Medium இல் கற்ற பட்டதாரி ஆசிரியரால் வகுப்புக்கள் அனைத்து கிளைகளிலும் நடாத்தப்படுகிறது.

# DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி, | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130,கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

Yashwin
Proprietor

## றோயல் மூக்குக் கண்ணாடியகம்
## Royal Optical

இல.16,18 இன் மேல் மாடி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(நெல்லியடி HNB வங்கி அருகில்)

Tel:021 226 2584
Mobile: 077 400 6008

வல்லிபுர ஆழ்வாரின் தேர்த் திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

## மந்திகை பார்மஸி
MANTHIKAI PHARMACY

சகலவிதமான ஆங்கில மருந்துகளையும்
சகலவிதமான பால்மா வகைகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய இடம்

**மந்திகை பார்மஸி- புலோலி**
**021 226 3283**

**Real Italian**
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

## Vinmeen Pizza
## Vinmeen Restaurant & Bakery

ஆறாவது ஆண்டு வெற்றிப் படியில் காலடி எடுத்து வைக்கும் நாம் நவீன உயர்தர ஐசிங்கேக் ஓடர்களை உடனுக்குடன் செய்து வழங்கி வருகின்றோம். மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் நவீன உயர்தர வெதுப்பக உற்பத்திகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

No.83, MAIN STREET, NELLIADI, KARAVEDDY.
T.P: 021 226 1051
கிளை: பஸ் நிலையம் முன்பாக (இலங்கை வங்கி அருகில்), கொடிகாமம் வீதி - நெல்லியடி.
தொ.பே: 021 226 1354

மாயவன் தேரேறி வந்து எல்லோருக்கும் நல்லருள் பாலிப்பாராக

## RAINBOW TILES STORES
## றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை வீதி, மந்திகை புலோலி

பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள், கட்டடப் பொருள்கள்,
விவசாய மருந்து வகைகள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள் மற்றும்
மின்சாரப் பொருள்கள் என்பன மலிவு விலையில்
கொள்வனவு செய்யலாம்.

021 226 2696    077 869 5418

திருமணப் பட்டுப் புடவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்
# தீபாவளி ஆடைத் திருவிழா

ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்

காலம் : 05.10.2019 - 28.10.2019
இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

**விசேட விலைக்கழிவு**

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,பார்ட்டி புரொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்


இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி பெரும் தாக்குதல்!

## 100 பேர் சாவு



அங்காரா.ஒக்.12
சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி பெரும் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் 100க்கும் அதிகமான ஆயுததாரிகள் கொல்லப்பட்டதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
சிரியாவின் வடக்குப் பகுதியில் நிலை கொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகளுக்கு எதிராகத் துருக்கி தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளது. இரண்டாவது நாளாக அது அந்தப் பகுதியில் தாக்குதலை நடத்தி வருகிறது. இதன் காரணமாகக் கிட்டத்தட்ட 10ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்தத் தாக்குதலில் துருக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் சாவடைந்தார். 3 பேர் காயமடைந்தனர்.



### பின்னணி

துருக்கி - சிரியா எல்லைப் பகுதியில் உள்ள குர்திஷ் ஆயுததாரிகளை அங்கிருந்து அகற்றுவதன் மூலம் தமது எல்லைப் பாதுகாப்பை உறுதி செய்யப்போவதாகத் துருக்கி அதிபர் எர்டோகன் அறிவித்தார். சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகளுக்கு ஆதரவு அளித்த அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறுவதாக ட்ரம்ப் அறிவித்தார். துருக்கியின் அறிவிப்புக் குறித்தும் அவர் விமர்சித்தார். இதனைத் தொடர்ந்து துருக்கி தனது தாக்குதலை ஆரம்பித்தது. துருக்கியின் இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.



# மிரட்டலுக்கு அஞ்சோம் தாக்குதல்கள் தொடரும்

## துருக்கி அறிவிப்பு

அங்காரா.ஒக்.12
அமெரிக்க அதிபர் ட்ரம்பின் மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம் என்றும், தமது எல்லையில் பதுங்கியுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீதான தாக்குதல் தொடரும் என்றும் துருக்கி கூறி உள்ளது.
சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவதாக அறிவித்தார் ட்ரம்ப். அங்குள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தும் என்று ட்ரம்பின் அறிவிப்புக்குப் பிறகு அறிவித்தார் துருக்கி அதிபர்.
பின்னர், போர் நடவடிக்கைகளை நிறுத்தாவிடில், துருக்கியின் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப், துருக்கி அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். இந்த நிலையிலேயே அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி எங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள மாட்டோம். குர்திஷ் ஆயுததாரிகள் மீதான போர் நடவடிக்கைகளை நிறுத்தப்போவதில்லை என்று துருக்கியின் அயலுறவுத்துறை அமைச்சர் மெவுல்ட் காவ்சக்லோ தெரிவித்தார்.

# குர்திஷ் – துருக்கி இடையே மத்தியஸ்தம் செய்ய முடியும்

## ட்ரம்ப் தெரிவிப்பு

வோஷிங்டன்.ஒக்.12
குர்திஷ் ஆயுததாரிகள் - துருக்கி இடையே தங்களால் மத்தியஸ்தம் செய்ய முடியும் என்று நம்புவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். இதுகுறித்து ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:
எங்களிடம் மூன்று வழிகள் உள்ளன. ஒன்று ஆயிரக்கணக்கான சிப்பாய்களை அனுப்பி இராணுவ ரீதியாக வெல்வது. இரண்டாவது துருக்கி மீது பொருளாதாரத் தடை விதிப்பது. மூன்றாவது துருக்கி மற்றும் குர்திஷ் ஆயுததாரிகள் இடையே மத்தியஸ்தம் செய்வது. இதில் எங்களால் மத்தியஸ்தம் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன் - என்றார்.



# ஈரான் கப்பல் தாக்கப்பட்டது?

சவூதியின் துறைமுகமான ஜெட்டாவுக்கு அருகாகச் செங்கடலில் பயணித்துக்கொண்டிருந்த ஈரானின் எண்ணெய்க் கப்பலான 'சபிடி' யை இரண்டு ஏவுகணைகள் தாக்கியுள்ளன என்றும் நேற்றுக் காலை 5 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தாக்குதலால் கப்பலில் இருந்த எண்ணெய்க் கொள்கலன்கள் சேதமடைந்துள்ளதாக ஈரானின் தேசிய செய்திச் சேவை அறிவித்தது.
சவூதியின் துறைமுகத்திலிருந்து 60 கிலோ மீற்றர் தெலைவில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதால், சவூதி இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று பன்னாட்டு செய்தி மேலும் குறிப்பிட்டுள்ளது.



1981ஆம் ஆண்டிலிருந்து பெண்களை மைதானத்துக்குள் அனுமதிப்பதற்கு மறுத்துவந்த ஈரான் தற்போது பெண்களை மைதானத்துக்குள் அனுமதித்துள்ளது. இந்த நிலையில் ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் உள்ள ஆசாதி மைதானத்தில் நடந்த கம்போடியாவுக்கு எதிரான ஈரானின் உலகக் கோப்பை ஆசியத் தகுதிச் சுற்றை 38ஆண்டுகளுக்குப் பின்னர் ஈரானியப் பெண்கள் பார்த்து ஆர்ப்பரிக்கிறார்கள்.

# 2019 நோபல்: இலக்கியத்துக்கான பரிசு இருவருக்கு!





ஸ்டொக்கோம்.ஒக்.12
மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம், வேதியியல் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி மதிப்புறுத்தப்படுகிறது. இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்குப் பெண் எழுத்தாளர் உட்பட இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
இதில் 2018ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான (வழங்கப்படாத காரணத்தால்) நோபல் பரிசுக்குப் போலந்து நாட்டை சேர்ந்த ஒல்கா டோகார்சுக் என்ற பெண் எழுத்தாளரும், 2019ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு ஆஸ்திரியாவை சேர்ந்த எழுத்தாளர் பீட்டர் ஹேண்ட்கியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ச...

இதன்படி 23 ஆயிரத்து 372 வாக்குகளைப் பெற்று 17 ஆசனங்களை பொதுமக்கள் முன்னணியும், 10 ஆயிரத்து 113 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சியும் பெற்றுள்ளன. அத்துடன், 5 ஆயிரத்து 273 வாக்குகளுடன் சுதந்திரக்கட்சி 3 ஆசனங்களையும், 2 ஆயிரத்து 435 வாக்குகளுடன் ஜே.வி.பி. 2 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

காலி மாவட்டத்திலுள்ள எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் நேற்றுக் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. 28 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 53 ஆயிரத்து 384 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் 72 75 சதவீதமானோர் வாக்குரிமையைப் பயன்படுத்தினர்.

ஐந்து கட்சிகளின் சார்பில் 155 பேர் களமிறங்கிய நிலையில் இவர்களிலிருந்து தொகுதி அடிப்படையில் 17 உறுப்பினர்களும், விகிதாசார அடிப்படையில் 11 பேருமாக மொத்தம் 28 பேர் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எந்தவொரு ஆசனங்களையும் கைப்பற்றவில்லை.

**எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது ஏன்?**

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் நகர, பிரதேச, மாநாகர சபைகளுக்கான தேர்தல்கள் கட்டங்கட்டமாகவே நடத்தப்பட்டன. 2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தும் முடிவை அரசு எடுத்தது.

அத்துடன், தேர்தல் முறைமையிலும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. இதன்படி விகிதாசார முறையில் அல்லாமல், தொகுதி, விகிதாசாரம் எனக் கலப்பு முறைமையிலேயே 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வேட்புமனுத் தாக்கலின்போது, எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு தேர்தல்கள் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது. இதற்கு எதிராக அக்கட்சி உறுப்பினர்கள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு வழங்கப்படும்வரை எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு உயர்நீதிமன்றம் தடை விதித்தது. இதனால், பெப்ரவரி 10ஆம் திகதி 340 சபைகளுக்கே தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வேட்புமனு நிரா கரிக்கப்பட்டது சட்டவிரோதம் என்றும், தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை ஏற்று எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதன்படி ஒக்டோபர் 11ஆம் திகதி (நேற்று) தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது. செப்டெம்பர் 27ஆம் திகதி தபால்மூல வாக்களிப்பு நடத்தப்பட்டது.

நேற்றிரவு வெளியாகிய தேர்தல் முடிவுகளின் பிரகாரம் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் 17 வட்டாரங்களிலும் வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தை பொதுமக்கள் முன்னணி கைப்பற்றியுள்ளது.

அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு முன்னர் இந்தத் தேர்தல் நடைபெற்றமை பிரதான தேர்தலுக்கான ஒத்திகையாகவே பலராலும் எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தகக்கத்து. (ம-22)

## எத்தியோப்பியாவின்...

பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் எத்தியோப்பியாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அகமது அலி, எதிரி நாடாக விளங்கிய எரித்திரியாவுடன் மேற்கொண்ட சமரச நடவடிக்கைகளை அடுத்தும், எத்தியோப்பிய மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்த மேற்கொண்ட பணிகளுக்காகவுமே இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சிறுபான்மை...

அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். சிறுபான்மை இனம் என விளிப்பதைக் கூடத் தான் விரும்பவில்லை எனவும் அவர் கூறினார்.

அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டாரவின் கொழும்பு இல்லத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்று சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இங்கு கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் நான் வென்றால் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரே வகையில் செயற்படும் திட்டங்களையே கொண்டுவரவுள்ளேன். எல்லோருக்கும் ஒரே நீதி என்பதே எனது கொள்கை

இனவாத ரீதியான செயற்பாடுகளுக்கு நான் இடமளிக்கமாட்டேன். எனது தந்தையார் காலத்தில் கூட நாங்கள் அனைத்து இனத்தவரையும் அரவணைத்தே செயற்பட்டோம். பெரும்பான்மை சிங்கள மக்களின் எண்ணப்பாட்டை மாற்ற வேண்டும். அவர்களுக்கு உண்மை நிலையைச் சொல்ல வேண்டும். அதனை நான் செய்வேன். தமிழ் ஊடகங்கள் எனது பயணத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்' என்றார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-22)

## நாவற்குழியில்...

ளையிட்டது.

வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஐந்து ஏக்கர் காணியில் போர்க்காலத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் தங்கியிருந்தனர். 2015ஆம் ஆண்டு அவர்கள் வெளியேறியதையடுத்து காணியில்லாத 63 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறியிருந்தன. நாவற்குழியில் வீடமைப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் தென்பகுதி குடும்பங்களும் குடியேறியிருந்தன.

இந்தக் காணியில் அத்துமீறிக் குடியேறியுள்ள தமிழ்க் குடும்பங்களை வெளியேற்றுமாறு வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்றுக்கு இரு பிரிவாக அவர்களைப் பிரித்து கட்டளை அனுப்பி வழக்குகள் நடைபெற்றன.

சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் குடியிருப்பாளர்கள் சார்பில் முற்பட்டு 'குடியிருப்பாளர்கள் தொடர்பாக நாடாளுமன்றில் கேட்டபோது வீடமைப்பு அமைச்சர் உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடிய பின்னர் தெரிவிக்கின்றேன் என்று கூறியிருந்தார். எனவே கால அவகாசம் வழங்க வேண்டும்' என்று நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

பின்னர் வழக்குகள் நீதிமன்றில் நடைபெற்றபோதிலும் சட்டத்தரணி சுமந்திரன் வருகை தரவில்லை. இந்த நிலையில் நேற்று அனைத்து வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அத்துமீறிக் குடியேறிய அனைவரையும் வெளியேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (த-9)

## விசாரணைக்கு...

பத் தலைவர் இரவு 10 மணியளவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் உயிரிழந்தார். இதனால் அவரின் சாவு தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது.

துன்னாலையைச் சேர்ந்த ஜே.ரூபன் (வயது -40) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். குறித்த இளைஞரை பொலிஸார் தாக்கியிருக்கலாம் என்று அவரின் உறவினர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

'குடும்ப வன்முறை தொடர்பில் உயிரிழந்தவருக்கு எதிராக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மனைவியினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதுதொடர்பில் விசாரணைக்காக அவரை அழைத்தபோதும் அவர் தலைமறைவாகியிருந்தார். நேற்று (நேற்றுமுன்தினம்) தனது வீட்டுக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் நிற்பதாக பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) 7.30 மணியளவில் அங்கு சென்ற பொலிஸார் அழைத்து வந்தனர். பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தலைவரிடம் வாக்குமூலம் பெறப்பட்ட வேளை, இரவு 10 மணியளவில் அவர் வாந்தி எடுத்தார். தான் அலரி விதை உட்கொண்டதாகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்ததால் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-105,26,173)

## வானூர்தி...

ளின் பிரதிநிதிகள் குறித்த வானூர்தி நிலையத்தை திறக்க தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது. இதனால் அமைச்சின் அதிகாரிகள் எவராவதுதான் பலாலி வானூர்தி நிலையத்தை திறந்து வைப்பார்கள் என்று கருதப்படுகிறது.

எதிர்வரும் 17ஆம் திகதி இந்தத் திறப்பு விழா மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. தலைமை அமைச்சர் வானூர்தி நிலையத்தைத் திறந்து வைக்க வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்பட்டது. எனினும் இது தேர்தல் காலமாதலால் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வானூர்தி நிலையத்தைத் திறந்து வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கட்சித் தலைமைப் பதவியைத் துறந்துள்ளதால் அவர் திறந்து வைக்க தடையில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதனால் எவர் இந்த வானூர்தி நிலையத்தை திறந்து வைப்பார்கள் என்பதில் சிக்கல் நிலவுகின்றது. (ம-105)

## யாழ்...

யல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், 2015ஆம் ஆண்டு மூன்று இராணுவத்தினருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தலா 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருந்தது. இந்த தண்டனை மற்றும் தீர்ப்புக்கு எதிராக குற்றவாளிகள் மூவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் மீது ஐந்து ஆண்டுகளாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில், நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான குமுதினி விக்ரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னான்டோ ஆகியோர் படையினர் மூன்று பேரையும் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து விடுதலை செய்ய உத்தரவிட்டனர். குற்றம்சாட்டப்பட்ட மூவரும் அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சாந்த சுபசிங்க, தனுஷ்க புஸ்பகுமார, பிரியந்த குமார ஆகிய மூன்று இராணுவத்தினருமே விடுவிக்கப்பட்டவர்களாவர். புஷ்பகுமார சார்பில் முன்னலையாகிய சட்டவாளர் ரஞ்சித் பெர்னாண்டோ, படையினர் மீதான குற்றச்சாட்டுகள் ஒரு தீவிரவாத குழுவினால் வேண்டுமென்றே - தீய நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டன என்று வாதிட்டிருந்தார். (ம)

## 20 வீத...

ஹீனைஸ் பாறூக் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட வாக்காளர் டாப்பிலிருந்து வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கோரிக்கைக் கடிதம் ஒன்றை மன்னார் மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன்.

கடந்த பல வருடங்களாக மன்னார் மாவட்ட தேர்தல் டாப்பில் பெயர்கள் குறிப்பிடப்பட்டு தொடர்ச்சியாக சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வாக்களித்து வந்த சிலருடைய பெயர்கள் இந்தமுறை வாக்காளர் டாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. வாக்காளர் டாப்பிலிருந்து பெயர் நீக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணான செயல். இதற்கு எதிராக தகுதி வாய்ந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர்.

நான் முதற்கட்ட நடவடிக்கையாக மன்னார் மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளருக்குக் கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளேன். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுமார் 25 வீதமான முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள். அதில் சுமார் 20 வீதமான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளமை முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதிபர், ஆசிரியர்கள் உள்ளடங்கலாக சுமார் 30 வருடங்களுக்கு மேல் வாக்களித்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. 2017ஆம் அண்டு 10 ஆம் இலக்க வாக்காளர்களை திருத்துவதற்கான சிறப்புச் சட்ட ஏற்பாடு ஒன்று நாடாளுமன்றில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் 6ஆவது பிரிவு, 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒருவர் அல்லது அவருடைய தந்தையோ அல்லது மூதாதையர்களோ ஏதாவது ஒரு மாவட்டத்தில் வாக்களித்திருந்தால் அவர்கள் 2021ஆம் ஆண்டு வரை அந்த மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துப் பெறவேண்டும் என்பதற்காக அந்தச் சிறப்புச் சட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சுமார் 6ஆயிரத்து 500 வரையிலான முஸ்லிம் மக்களின் வாக்குகள் வெட்டப்பட்டுள்ளன. எனவே அடுத்தகட்ட நகர்வாக தகுதிவாய்ந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். என்று தெரிவித்தார். ஊடகவியலாளர் சந்திப்பில் சட்டத்தரணி எம்.எஸ்.ஹஸ்மி கலந்து கொண்டிருந்தார். (த-56)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்ட எறிபந்தில் 10 அணிகள் காலிறுதிக்குள்

யாழ்ப்பாணம்,ஒக்.12
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் இந்த முறை 10 அணிகள் காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டப் போட்டிகள் குருநாகல் மல்லிய தேவா மாதிரி பாடசாலையில் நடைபெற்று வருகின்றது.
தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 17, 20 வயதுக்குட்பட்ட ஆண் பெண் இருபாலாருக்குமான போட்டியில் 17 வயதுக்குட்பட்ட போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆண்கள் அணியும், 20 வயதுக் குட்பட்ட போட்டியில் புதுக்குளம் மகா வித்தியாலய பெண்கள் அணியும், 17,20 வயதுக்குட்பட்ட போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய பெண்கள் அணியும், கோட்டைகட்டிய குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், 17, 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணியும் என பத்து அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றனர். (422)





# சென்.பற்றிக்ஸ் கல்லூரி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம் , ஒக்.12
பேராயர் பொஞ்சின் ஆண்டகை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி அணிக்கும் இடையிலான 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மற்றுமொரு 16 வயதுப் பிரிபினருக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோசப் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## ஞானமுருகன் – வளர்மதி இறுதியில் பலப்பரீட்சை





யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் மயிலங்காடுஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## கயிறிழுத்தல் போட்டியில்

# துணுக்காய், ஒட்டுசுட்டான் பி.செ. அணிகள் வாகை

முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான கயிறிழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் துணுக்காய் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றது.
முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணியை எதிர்த்து துணுக்காய் பிரதேச செயலக அணி மோதியது இதில் துணுக்காய் பிரதேச செயலக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியை எதிர்த்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அணி மோதியது. இதில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (110)





## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.12
மன்னார் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மரியாம்பிள்ளை எடிசனின் அனுசரணையுடன் முத்துக்கள் மூன்று புகழ் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் எடிசன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முத்துக்கள் மூன்று புகழ் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டக்கண்டல் சுடர்ஒளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நானாட்டான் றீகன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டிலாசால் பளைக்குழி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பட்டித்தோட்டம் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் குழந்தைஇயேசு விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நெட்டாங்கண்டல் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எமில்நகர் இருதயநாதர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம் ஒக்.12
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் எஸ்.சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோக்லியின் இரட்டைச் சதத்துடன்

# தென்னாபிரிக்காவுக்கு மிகையான அழுத்தம்





தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் கோக்லி இரட்டைச் சதமடித்து அசத்த, இந்திய அணி 5 இலக்குகள் இழப்புக்கு 601 ஓட்டங்களைக் குவித்தது.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் போட்டியை இந்திய அணி கைப்பற்றியது. இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் முதல்நாள் முடிவில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் கோக்லி 63 ஓட்டங்களுடனும், ரகானே 18 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர்.

இருவரும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரகானே அரைச் சதமடித்து 59 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அணித் தலைவர் கோக்லி பொறுப்புடன் ஆடி இரட்டைச் சதமடித்து அசத்தினார். அவருக்கு ரவீந்திர ஜடேஜாவும் சிறந்த இணைப்பை வழங்கினார். இருவருக்குமான இணைப்பாட்டமாக 225 ஓட்டங்கள் பகிரப்பட்டன. ஜடேஜா சதத்தை தவறவிட்டு 91 ஓட்டங்கள் பெற்ற போது முத்துசாமியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். கோக்லி 2 ஆறு ஓட்டங்கள் 33 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 254 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காது களத்திலிருந்தார்.

அணி 5 இலக்குகள் இழப்புக்கு 601 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்குக்கு தனது முதல் இன்னிஸுக்காகக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணிக்கு யாதவ் ஆரம்பமே அதிர்ச்சியைக் கொடுத்தார். தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான எல்கர் 6 ஓட்டங்களுடனும், மார்கரம் ஓட்டமெதனையும் பெறாது பவிலியன் திரும்பினர். அணி 33 ஓட்டங்களைப் பெற்ற போது 3 இலக்குகளை இழந்தது. நேற்றைய நாள் முடிவில் அணி 3 இலக்குகள் இழப்புக்கு 36 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் பேர்ன் 20 ஓட்டங்களுடனும், நோர்ரேஜ் 2 ஓட்டங்களுடனும் உள்ளனர்.

## இருதயராஜா - சண்ஸ்ரார் இறுதியில் மோதல்





தீவக கால்பந்தாட்டச் சங்கத்தால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தீவக கால்பந்தாட்டச் சங்கத்தலைவர் இ.ஜேயால்ட் அன்ரனி தலைமையில் அல்லைப்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் எல். இளங்கோவன், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தீவக மறைக்கோட்ட முதல்வரும் அல்லைப்பிட்டி, மண்டைதீவு பங்குத்தந்தையுமான ம. டேவிற்மனுவேற்பிள்ளை, வேலணை பிரதேச செயலர் எ.சோதிநாதன், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர்ஜி.அன்ரனிடேவிட்சன், மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி அலகு விரிவுரையாளர் மா. இளம்பிறையன், யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர். அ.சுரேந்திரன், உலகமையத்தின் தலைவர் பிள்ளைநாயகம் சதீஸ்கு[illegible] சங்க தலை[illegible] ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர். (23)



ரி-20 தோல்வியின் எதிரொலி

## சர்பிராஸ் அகமட் பதாகையை சேதப்படுத்தும் பாக். ரசிகர்

இலங்கை அணியுடனான ரி-20 தொடரில் பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்ததால் சீற்றமடைந்த பாகிஸ்தான் ரசிகர் ஒருவர் அந்த அணியின் தலைவர் சர்பிராஸ் அகமட் பதாகையொன்றை தாக்கி சேதப்படுத்தியுள்ளார்.

இது சம்பந்தமான காணொலி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. இதில் பாகிஸ்தான் அணித் தலைவரின் பதாகையை காலால் உதைக்கும் அந்த ரசிகர் பின்னர் அதனை கிழித்து சேதப்படுத்துகின்றார்.

இலங்கை அணியுடனான தோல்வியை தொடர்ந்து பாகிஸ்தான் அணித் தலைவர் கடும் விமர்சனங்களையும் ரசிகர்களின் சீற்றத்தையும் எதிர்கொண்டுள்ளார்.

### தேசிய மட்ட பெண்களுக்கான

## பளுதூக்கல் போட்டியில் சுகன்யாவுக்கு வெள்ளி



யாழ்ப்பாணம், ஒக்.12

திறந்த வயதுப் பிரிவினருக்கான தேசிய மட்ட பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.சுகன்யா வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

தேசிய மட்ட திறந்த வயதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான பளுதூக்கல் போட்டிகள் கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற 87 கிலோ எடைப் பிரிவினருக்கான பளுதூக்கல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. சுகன்யா சினெச் முறையில் 65 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக்முறையில்75கிலோ பளுவையும் ஒட்டு மொத்தமாக 140 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். இவர் யாழ். பாசையூர் புனித அந்தோனியார் பெண்கள் வித்தியாலய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜர் பெடரரை வீழ்த்தி சிவ்ரெவ் அரையிறுதிக்குள்



சீனாவில் நடைபெற்று வரும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் பகிரங்க ரென்னிஸ் போட்டியின் காலிறுதியில் ரோஜர் பெடரரை வீழ்த்திய அலெக்சாண்ட்ர் சிவ்ரெவ் அரையிறுதிக்குள் நுழைந்தார்.

சீனாவில் ஷாங்காய் மாஸ்டர்ஸ் பகிரங் ரென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டி ஒன்றில் சுவிட்சர்லாந் தின் ரோஜர் பெடரரும், ஜேர்மனியின் அலெக்சாண்டர் சிவ்ரெவும் மோதினர்.

இதில் முதல் செற்றை சிவ்ரெவ் 6:3 எனக் கைப்பற்றினார். இதனால் ஆக்ரோஷத்துடன் விளையாடிய பெடரர் இரண்டாவது செற்றை 7:6 என கைப்பற்றினார்.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் சிவ்ரெவ் 6:3 என கைப்பற்றி ரோஜர் பெடரருக்கு அதிர்ச்சியைக் கொடுத்து அரையிறுதிக்கு முன்னேறினார்.



7ஆவது முறையாக இரட்டைச் சதம் பெற்றதால்

# சச்சின், சேவாக்கை முந்தினார் கோக்லி

தென்னாபிரிக்காவுக்கு எதிரா 2ஆவது டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் சச்சின் மற்றும் சேவாக் சாதனைகளை விராட் கோக்லி முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் புனேயில் ஆரம்பமாகியது. இரண்டாம் நாள் ஆட்டத்தில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித் தலைவர் விராட் கோக்லி டெஸ்ட் போட்டிகளில் தனது 7ஆவது இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். மேலும் 7 முறை இரட்டைச் சதம் அடிக்கும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர்களான சச்சின் மற்றும் வீரேந்திர சேவாக் இருவரின் சாதனையையும் முறியடித்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சச்சின் மற்றும் சேவாக் இருவரும் முறையே தலா 6 இரட்டைச் சதங்கள் பெற்றுள்ளனர். சச்சின் 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6 இரட்டைச் சதங்களும், சேவாக் 104 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 6 இரட்டைச் சதங்களும் அடித்துள்ளனர். ஆனால் விராட் கோக்லி தனது 81ஆவது டெஸ்ட் போட்டியிலேயே அவர்கள் இருவரது சாதனையையும் முறியடித்தார்.

இந்த 7 இரட்டைச் சதங்களுமே விராட் கோக்லி அணித் தலைவராகச் செயற்பட்ட போட்டிகளில் அடிக்கப்பட்டவை என்பது மற்றுமொரு சிறப்பு.

**பணிப்பெண் தேவை**
நல்லூரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு 6மாத குழந்தையை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் பணிப்பெண் தேவை. வீட்டில் தங்கி நின்று பணிபுரிபவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 308 3007

**மணமகள் தேவை**
1988 ஆம் ஆண்டில் பிறந்த 2 இல் செவ்வாய் உள்ள கனடா நாட்டிற் பிரஜையான விஸ்வகுல மணமகனுக்கு மணமகள் தேவை. 1993 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்த பெண்ணாக இருக்கவேண்டும்
தொடர்பு: 077 645 4442 (சித்தப்பா)

**விற்பனைக்குண்டு**
தரமான நாட்டுத் தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு.
077 598 1890

**வீடு விற்பனைக்கு**
யாழ்.நகருக்கு அண்மையில் காதி அபுபக்கர் வீதியில் இரண்டு புது வீடுகள் அவசர விற்பனைக்குண்டு.
076 072 6496, 077 017 4094

## மரண அறிவித்தல்



### குருநாதி கதிரேசு

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்த முன்னாள் வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலய பரிபாலனசபை செயலாளரும், வயாவிளான் - ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாசாலை, றோ.க.த.க. பாடசாலை ஓய்வுநிலை அதிபரும் ஆகிய குருநாதி கதிரேசு அவர்கள் தனது 97 ஆவது அகவையில் 08.10.2019 செவ்வாய்க்கிழமை கனடாவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகனும், திருமதி கதிரேசு - தங்கரத்தினத்தின் (ஓய்வுநிலை ஆசிரியை)அன்புக் கணவரும், காலஞ்சென்ற குருநாதி - முருகேசு அவர்களின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி - திருநாவுக்கரசு, வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் ரேவதிதேவி (கொக்குவில்), குகதாஸ் (சுவிஸ்), மோகனாதேவி (கனடா), பிறேமாதேவி (கனடா),விமலாதேவி (கனடா), வசந்தாதேவி (கொழும்பு), விஜியகுமாரி (கனடா), சாந்தகுமாரி (சுவிஸ்), நந்தகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசீலன், கோசலா, ஜெகதீஸ்வரன், சதாசிவம், சிவ-குமார், அலோசியஸ், உதயகுமார், சந்திரகுமார், யோகேஸ்வரி ஆகியோரின் மாமனா ரும், காலஞ்சென்ற சாருஜன், நீருஜா, நிராகுலன் மற்றும் கரீசன், கரீசியா, அஜயந்தன், ஆஸ்லி, றெஜ்சன், ஜெஜ்சன் கேசி, துர்க்கா, கிறிஸான், றொபினா, விமோக்சன், கிசானி, அஜித், வினித், அர்சுன், அபிராபி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**வல்லிபுரம் - சத்தியசீலன் -**
**021 221 2332, 077 376 9354**
**வசந்தாதேவி - அலோசியஸ்**
**011 250 7664, 077 981 7798**

நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு.
(CS/28631) (11,17)

**Study in LATVIA**
MBBS | Engineering | IT | Management
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு
Admission open for 2020 Feb Intake



★ நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
★ IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ Schengen visa
100% Scholarships Available in ITALY & CHINA
ICS A Complete Visa Solutions Study Abroad
Admissions :- 077 301 3060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 492 6222
107 B 1/1 , Galle Road , Colombo 6. 011 434 3322

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
**V2 Travels**
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

**UDUVIL GIRLS' COLLEGE**
*invites*
*to its Prize Day*
to be held on,
*Monday, the October 14, 2019,*
*at 2.30 p.m*
*Chief Guest: Her Excellency Sara Hulton O.B.E.*
*British High Commissioner to Sri Lanka*
Please grace our special occasion with your presence.
*Principal, Staff & Students.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.